
வெகுதானிய மாசி

# சைவநீதி

சைவ வளர்ச்சி கருதிய செய்தி தரும்
மாத இதழ்



மகா சிவராத்திரி விரதச் சிறப்பிதழ் 1999. 02. 14

ரூபா 20/-

உ

சிவமயம்

# சைவநீதி

## பொருளடக்கம் :

1. மலரோன் நெடுமாலறியா அரும் பெருமான். 1
– ஆசிரியர்

2. சாத்திரமும் தோத்திரமும் : பதிமுதுநிலை - உருவமும் உயிருமாகி. 2
– மா. வே. நெல்லையப்பப்பிள்ளை பி.ஏ

3. மகா சிவராத்திரி. 3
– செ. நவநீதகுமார்

4. அருமைப் பெருமான் அளியனாம் செய்கை. 4
– பண்டிதர் ச. சுப்பிரமணியம்

5. சிவராத்திரி சிறப்பு. 6

6. கும்பாபிஷேகத்தில் இடம் பெறும் ஒழுங்கு உணர்வுருக்கம் நித்திய நைமித்தியத்திலும் இடம் பெற வேண்டும். 7
– இலக்கிய கலாநிதி, பண்டிதர் மு. கந்தையா

7. இருதலைக் கொள்ளி எறும்பு. 18
– முருக வே. பரமநாதன்

8. வில்வம். 19
– அபிதான சிந்தாமணி

9. திருவாசகச் சிந்தனை - திருவுந்தியார். 20
– பண்டிதர் சி. அப்புத்துரை

10. சோதி லிங்கங்கள். 22
– நீதர்

11. ஐவகைச் சிவராத்திரி 23

12. கோச் செங்கட் சோழ நாயனார். 24
– சிவ. சண்முக வடிவேல்

13. பஞ்ச கௌவியம் 25
– அபிதான சிந்தாமணி

14. சிவராத்திரிப் பெயர்க் காரணம் 26
– இலிங்கோற்பவர்

15. முதலாம் சைவ வினா விடை - கடவுள் இயல். 27
– ஆறுமுக நாவலர்

16. தரும தேவதை. 27

17. திருவிளையாடற் புராணம் - உக்கிர பாண்டியன் திருவவதாரம். 28
– கூடலான்

18. இலிங்க புராணத் திருக்குறுந்தொகை 29
–திருநாவுக்கரசு நாயனார்.

19. ஒழுக்கத்துக்கு உயிரான எட்டு. 30
– ஆசாரக் கோவை

சைவநீதி இதழில் வரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர் – இதழ் நிர்வாகிகள்.

உ
சிவமயம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# சைவநீதி

மலர் 2 வெகுதானிய மாசி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் இதழ் 11

கௌரவ ஆசிரியர்
சைவப்புலவர்மணி
வித்துவான்
திரு. வ. செல்லையா

நிர்வாக ஆசிரியர்
திரு.செ. நவநீதகுமார்
42. ஜானகி லேன்,
கொழும்பு 04.

பதிப்பாசிரியர்
திரு. மு. கௌரிராஜா.

## மலரோன் நெடுமாலறியா அரும்பெருமான்

திருமால், பிரமன் இருவரும் தாம், தாம் பெரியவர்கள் என்று நினைத்தார்கள். படைத்தல் தொழிலைச் செய்து அனைத்தையும் உருவாக்குவதாற் தானே பெரியவன் என்றார் பிரமன். படைத்தவற்றைக் காப்பதனாற் தானே பெரியவன் என்றார் திருமால். வாய்த்தர்க்கம் போராய் மூண்டது. பலகாலம் இருவரும் பொருது நின்றனர். இருவருக்கும் உண்மையை விளக்க எண்ணிச் சிவபெருமான் அவர்கள் முன் சோதி ரூபமாய்த் தோன்றினார். "இச்சோதியின் அடியை அல்லது முடியைக் காண்பவரே பெரியவர்" என்ற சரீரி வாக்கெழுந்தது.

பிரமன் அன்ன வடிவெடுத்து முடியைக் காண்பதற்கு ஆகாயத்திற் பறந்தான். திருமால் பன்றியுருக் கொண்டு பூமியை அகழ்ந்து பாதாளம் நோக்கிச் சென்றான். இருவரும் பலகாலம் அலைந்து சென்றும் முடியையோ, அடியையோ காணமுடியவில்லை. இருவரும் அகந்தை ஒழிந்து அன்பாற் தொழுது நின்றனர். சோதி ஒடுங்கி லிங்கோற்பவராக இறைவன் காட்சி கொடுத்து அருள் புரிந்தான். இத்தினமே மகா சிவராத்திரியாகும்.

கல்விக் கதிபதி சரஸ்வதி. சரஸ்வதியின் கணவன் பிரமா. செல்வத்துக்கு அதிபதி இலக்குமி. இலக்குமியின் கணவன் திருமால் இருவரும் தேடிக் காணாமை, கல்வியினாலோ, செல்வத்தினாலோ இறைவனைக் காண முடியாது. பத்தி ஒன்றினாலேயே அவனைக் காணலாம் என உணர்த்துகிறது. "பத்தி வலையிற்படுவோன் காண்க" இருவரும் காணாத இறைவனை தமது உள்ளத்திலே கண்டதாக அப்பர் பெருமான் கூறுகின்றார்.

*தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு – நான்முகனும்*
*தேடித்தே டொனுத் தேவனை என்னுளே – தேடிக் கண்டு கொண்டேன்.*

# சிவராத்திரிச் சிறப்பு

வேடன் ஒருவன் உணவின் பொருட்டு ஆண்மானை எய்ய அம்பு தொடுக்கையிற், கண்ட மான் வேடனை நோக்கி, நான் என்கர்ப்பிணியாகிய மனைவியைக் கண்டு வார்த்தை கூறி மீளுகிறேன் என்று உறுதிகூற வேடனும் அங்கீகரித்து விடையளிக்கச் சென்றது. பெண்மான் ஆணினைக் காணாது வேடனிடம் வந்து ஆண்மானைக் கண்டு வருவதாய் உறுதி அளித்துச் சென்றது. அவ்வகை ஒன்றுக் கொன்று தமக்கு நேர்ந்ததைப் பற்றிக் கூறிப் பிள்ளைகளுடன் வேடனிடம் வர, முன் வேட்டைக்குச்சென்று, மகாசிவராத்திரியில் வனத்தினிற் சிவபூஜை செய்தவர்களையும் சிவதரிசனத்தையும் கண்டதனாலும் வேடனுக்கு ஞானோதயமாய் மான்களே எனக்கு ஞானோதயத்தைத் தந்தமையால் நீங்கள் குருவுக்கொப்பாகின்றீர்கள் ஆதலால் இனி எவ்வுயிரையுங் கொல்லேன் என, சிவமூர்த்தி தரிசனம் தர வேடன் முத்தி பெற்றான்.

---

## மகா சிவராத்திரி நான்கு காலங்களிலும் சிவபெருமானைப் பூசிக்கும்முறை

| உபசாரம் | முதலாங் காலம் | இரண்டாம் காலம் | மூன்றாம் காலம் | நான்காம் காலம் |
|---|---|---|---|---|
| அபிஷேகம் | பஞ்சகௌவியம் | பஞ்சாமிர்தம் (தேன், சர்க்கரை, பால், தயிர், நெய்) | தேன் | கருப்பஞ்சாறு |
| ஆடை | பட்டு | பருத்தி | கம்பளி | மலர் ஆடை |
| வண்ணம் | சிவப்பு | மஞ்சல் | வெள்ளை | பச்சை |
| அலங்காரம் | வில்வம் | தாமரை | சாதிமல்லி | நந்தியாத்தம் |
| அருச்சனை | தாமரை | துளசி | வில்வம் | நீலோத்பலம் |
| நிவேதனம் | பொங்கல் | பாயசம் | எள்ளன்னம் | சுத்தான்னம் |
| பழம் | வில்வம்பழம் | பலாப்பழம் | மாதுளம்பழம் | வாழை முதலிய பலவகைப் பழங்கள் |
| வேதம் | இருக்கு | யசுர் | சாமம் | அதர்வணம் |
| திருமுறை (பஞ்சபுராணம்) | சிவபுராணம் | இருநிலனாய் | லிங்கபுராணக் குறுந்தொகை | போற்றித்திருத் தாண்டகம் |

# மகா சிவராத்திரி

- செ. நவநீதகுமார் -

சிவவிரதங்களுட் சிறந்த விரதம் சிவராத்திரி விரதமாகும்.

மறைகளிற் சாமம் மகங்களிற் புரவி
மகமலை களில்மக மேரு
நிறைபுனல் நதியில் கங்கைஓர் ஐந்தாய்
நிகழ்ந்தபூ தத்தின்ஆ காயம்
முறைதெரி சுரரில் கருமுகி லூர்தி
முதன்மைபெற் றுயர்ந்த தேபோல்
அறைதரு விரதம் அனைத்திலும் உரைக்கும்
அரனிர வதிகமென் றறிமின்

என்பது சிவராத்திரி புராணம்.

மாசி மாதத் தேய் பிறை (பதின் நான்காம் நாள்) சதுர்த்தசி அன்று அனுட்டிக்கும் விரதம் மகா சிவராத்திரியாகும். மகா பிரளய முடிவில் அம்பாள் சிவமூர்த்தியைப் பூசித்துப் பேறு பெற்றாள். உலகோரும் இந்நாளிற் பூசித்தால் பேறு பெற அருள வேண்டும் எனவும் இறைவனை வேண்டினாள்.

திருமால் பிரமன் கொண்ட அகந்தையை நீக்க இறைவன் இலிங்கோற்பவ மூர்த்தியாகி வெளிப்பட்ட காலமே சிவராத்திரியாகும். சிவராத்திரி விரதம் அனுட்டிப்பவர்கள் முதனாள் திரயோதசி அன்று ஒரு பொழுதுண்டு சதுர்த்தசியன்று உண்ணாது உபவாசம் இருந்து இரவு கண்விழித்திருந்து நான்கு சாமமும் சிவ வழிபாடு செய்து, மறு நாட் காலை அடியாரோடு பாரணம் பண்ணுதல் வேண்டும். அன்றிரவு பதினான்கு நாழிகையின் மேல் ஒரு முகூர்த்த காலம் இலிங்கோற்பவ காலமாகும். இரவு முழுவதும் கண் விழித்து இருக்க இயலாதவர்கள் இலிங்கோற்பவ காலம் வரையாவது விழித்திருக்க வேண்டும். உபவாசம் இருக்க முடியாதவர்கள் நீரேனும் பாலேனும் அருந்தலாம்.

சிவாலய தரிசனம், பஞ்சாட்சர செபம், சிவபுராணம் படித்தல் திருமுறைப்பாராயணம் போன்றன அன்று மேற் கொள்வது உத்தமமானது.

மாசியின் அபரமீரேழ் வளர்சதுர்த்தசி இராவில்
தேசியாம் சிவனார்முத்தி அளித்த விரதந்தன்னை
ஆசையான் மொழிந்தோர் கேட்டோர் அருந்துயர் ஒழிவர் என்றும்
நேசமாய் விரதநோற்பார் சிவபத நெறியிற் சேர்வார்

சிவராத்திரியிற் சிவபெருமானைப் பூசித்தவர் தரிசித்தவர் மாத்திரமன்றி இதன் பெருமையைக் கேட்டோரும் நற்கதி பெறுவர். முருகப் பெருமான், சூரியன், பிரம்மா, விஷ்ணு, மன்மதன் இயமன், இந்திரன், சந்திரன், அக்கினி, குபேரன் ஆகியோர் இவ்விரதத்தை அனுட்டித்துப் பேறு பெற்றனர்.

# அருமைப் பெருமான் அளியனாம் செய்கை

- பண்டிதர் ச. சுப்பிரமணியம் -

அரிபிரமர்க்கும் அரிய சிவபிரானைத் திருமகள் – கமலை – பூசித்த தலமாதலால் கமலாலயம் என்பது கோயில். அக்கோயில் அமைந்த திருவாரூர் பூமிதேவியின் இருதயகமலம். திருமாலின் மார்பில் வீற்றிருந்து அசபாநடனம் – ஆடாமலாடுதல் – புரிந்த தியாகராசமூர்த்தி தேவேந்திரன்பால் வந்து பூசிக்கப்பெற்றிருந்தவர். பின் முசுகுந்தனிடம் விருப்புடன் வந்து ஆரூரில் அமர்ந்து அருச்சிக்கப்பெற்று அருள்பாலிப்பவர். சோமாஸ்கந்தர் வீதிவிடங்கர் என்னும் திருநாமங்கள் கொண்டவர்.

மநுநீதி கண்ட சோழர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், தண்டியடிகள் நாயனார் முதலிய அடியவர்களுக்குப் பேரருள் புரிந்தவர். அடியார் பெருமையையும், அடியார்க்கே அடிமையாதலின் சிறப்பையும், திருத்தொண்டத் தொகைப் பதிகத்தைச் சுந்தரர் மூலம் பாடுவித்துப் பாரில் விளங்கச் செய்தவர். பெருமைக்கும் அருமைக்கும் வரம்பாக இருப்பவர். அணுகாது அகலாது அகமும் புறமும் அந்தர்யாமியாயுள்ளவர்.

அப்படிப் பரம்பொருளாயமரும் பெருமான் அடிபணியும் அன்பர்களான அடியார் விஷயத்தில் எளியர்க் கெளியனாக நின்று உபகரிக்குமாறு உணரவும், உரைக்கவும் ஒண்ணாதமாண்பினதாகும். வள்ளுவர்தந்த தமிழ்மறை நூலில் "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம், கருமமே கட்டளைக்கல் எனவும், பணியுமாம் என்றும் பெருமை" எனவும் கூறியவையே என்றும் சான்றாகும்.

குமரகுருபர சுவாமிகள் பரமபதியாகிய தியாகராச சுவாமிகளின் திருவருட் செயல்களைத் தனித்தனி எடுத்து இந்தக் கட்டளைக்கல் – உரைக்கல்லில் – உரைத்துப் பார்த்து அவை மாற்றறியாப் பசும் பொன்னாம் என எங்கள் பார்வைக்குக் காட்சிச்சாலையில் வைக்கின்றார். நாமும் காண்போமே!

*"நித்திலமாட நீண்மறு குடுத்தமை*
*மாமுகில் தவழும் மணிமதிற் கமலைப்*
*பெம்மான் அருமைப் பெருமான் ஆயினும்"*

முத்துக்கள் அழுத்திய மாடவரிசையுள்ள நீண்டவீதிகள் சூழ்வரும் கரியமுகில்கள் தவழும் அழகிய மதில் காவலாகவுள்ள கமலாலயத்தில் வீற்றிருக்கும் பெருமான் அருமைபெருமை மிக்க தியாகராசன் என்னும் பெரியோனாக இருப்போன் ஆயினும் அவன் செயல்.

*"ஊனூண் வாழ்க்கைக் கானவர் குரிசில்*
*செஞ்சிலை சுமந்த கருமுகில் ஏய்ப்ப*
*உண்டுமிழ் தீநீர் உவந்தனர் ஆடியும்"*

ஊனை உண்டுவாழும் வேடுவர்குலதில கராகிய திண்ணனார், வில்லேந்திவரும் கருமுகில் போல வாயால் முகந்துகொண்டு வந்த உமிழ்ந்த நீரைத் திவ்விய அபிஷேக தீர்த்தமாக விருப்புடன் ஏற்றுத் திருமஞ்சனம் ஆடினார். ஈதொருசெய்கை.

*"விருப்படிக் கொண்ட மிச்சில் ஊன் மிசைந்தும்"*

அன்பை மூலமாகக்கொண்டதாய் பழகிய வாயிலிட்டு நாவில் பதமுற வெந்ததே எனச் சுவைபார்த்து உமிழ்ந்து கொண்டுவந்து படைத்த

எச்சில் ஊனையே திருவமுதாக அருந்தியருளியும், இதுமற்றொருசெயல்.

*"செருப்படிக் கடிகள் செம்மாந் திருந்தும்"*

முன்னே சூட்டியிருந்த நிர்மாலிய மலர்களை அகற்றத் தடவிய திண்ணனாரது காற்செருப்புத் தீண்டியதற்கும் இடம் தப்பாமற் காணக் கண்ணிலே தொட்ட செருப்பு ஊன்றலுக்கும் பெரிதுவந்து இறுமாந்திருந்தும், இதுவும் ஓர் செயல்.

*''தொல்புகழ் விசயன் வில்லடி பொறுத்தும்*
*அருந்தமிழ் வழுதி பிரம்படிக் குவந்தும்"*

பழம்பெரும் புகழ் படைத்த அருச்சுனன் வில்லால் அடித்ததனைப் பொறுத்தருளியும் அருமையான தமிழ் வளர்க்கும் பாண்டியன் (வைகைக்கரை வரம்புகட்டியதிலே குறைகண்டு) தண்டித்த பிரம்படியை உவப்புடன் எற்றும், ஒவ்வொரு அருட் செயல்கள்

*"நள்ளிருள் யாமத்து நாவலர் பெருமான்*
*தள்ளாக் காதல் தணிப்பதற்கு அம்ம*
*பரவை வாய்தலில் பதமலர் சேப்ப*
*ஒருகால் அல்ல இருகால் நடந்தும்"*

நடு இரவாகிய அர்த்த சாமத்தில் நாவலர் பெருமானாகிய சுந்தரமூர்த்தி நாயனாரின் தடுத்தற்கரிய காதலால் எழும் பிரிவுத்துயர் தணித்ருளும் முகமாகவே அம்மா ஊடல் கோண்டிருந்த பரவையார் மனைமுன்னே தமதுபாதமலர் வருந்திச் சிவக்குமாறு ஒருமுறையன்றியே யன்றி இருமுறை தூதாக நடந்து ஊடல் தணிவித்து இணங்கச் செய்தும், இதுவும் பெருமை கருணைகாரணமான கருமம்.

*"எளியரில் எளியன் ஆயினன் ஆதலில்*
*அளியர் போலும் அன்பர்கள் தமக்கே"*

ஆக இங்ஙனம் அப்பெருமானின் செயல்கள் அமைந்தவாற்றால், அரும்பெருமான் எனப்படும் எம்பெருமான் தன்னைத் தாழ்ந்து பணிபவரான தாசர்களுக்கெல்லாம் அடியர்க்கடியான் தாசா நுதாசன் எனப்போற்றப்படுகிறான்; ஆதலால் அன்புடையார் மாட்டு அவரினும் மேலான அன்புடையவன் போலும். இல்லையெனில் அன்பர்களாலே நேர்ந்தனவும் தாமே தாழ்ந்து செய்தனவுமாகிய இத்தனை தாழ்வையும் தாங்க உவப்புடன் ஏற்றுக்கொள்ள இயலுமா; அம்மம்ம அதிசயம்.

இவ்வருட் செயல்களை இறைவன் செய்த பொழுதெல்லாம் இவற்றை எய்திய அடியவர் இவை தம் பெருமையால் பெருமான் செய்தனர் என்று பெருமிதம் கொண்டனரோ எனில் அன்று அன்று.

தமது சிறுமையையும் பெருமானின் பெருமையையும் தம்மனத்தெண்ணி உபசாரம் பல செய்து தொழ வேண்டிய பெருமான் இவை செய்யும் நிலைநேர்ந்ததே! பெருமான் திறத்தில் என்ன அபசாரம் செய்தோம்; இதற்குக் கழுவாய் யாதோ! என்று தளர்ந்து தம்மை நொந்திருக்கவே காண்கிறோம். இது பணியாகும்.

இந்நிலை அடியவர் பெருமையையும் மேலும் மேலும் பெருமைப்படுத்தும் பெருமிதம் – தற்பெருமை – கொள்ளாதிருத்தலே பெருமையேனும் உயர்பண்பாம். தமிழ்மறை ''பெருமை பெருமிதமின்மை'' என்ற ஒருவாக்கிலே கூறுகின்றது.

திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணத்தில் நாம் காணும் நாயன்மார் யாவரிடத்தும் காணப்படும் உயர்பெரும் பண்பு இதுவே. இதற்குத் தோழமை பூண்டு துணைநிற்பது இன்சொல் என்பது. இவையே எவர்க்கும் சிறந்த அணிகலமுமாம்.

*"பணிவுடையன் இன்சொல னாதல் ஒருவற்கு*
*அணிஅல்ல மற்றுப் பிற"*
*என்னும் குறளமுதவாக்கே வாழ்வுக்கு மருந்தாம்.*

*திருவாரூர் நான்மணிமாலை குமர குருபரர் பிரபந்தம்.*

உ

சிவமயம்

# சாத்திரமும் தோத்திரமும்

## பதிமுதுநிலை : உருவமும் உயிருமாகி

*திருச்சிற்றம்பலம்*

உருவமு முயிரு மாகி யோதிய வுலகுக் கெல்லாம்
பெருவினை பிறப்பு வீடாய் நின்றவெம் பெருமான் மிக்க
அருவிபொன் சொரியு மண்ணா மலையுளா யண்டர் கோவே
மருவிநின் பாத மல்லால் மற்றொரு மாடி லேனே.

*திருச்சிற்றம்பலம்*

பொழிப்புரை:

பெரியோர்கள் நூல்களிற் கூறிய உயிரில் உலகம், உயிருலகம் என்ற எல்லா உலகங்களிலும் உயிரில்லாத உலகத்திற்கு உருவம் ஆகியும், உயிருலகத்திற்கு உயிர் ஆகியும் வல்வினையினால் உண்டாகும் கட்டு (பந்தம்) ஆகியும், பாவநீக்கம் பெற்றவர்களுக்கு வீடாகியும் நிற்கின்ற தலைவனே, மலையிலிருந்து மிகுதியாக வீழும் அருவிநீரானது பொன்னைச் சொரிகின்ற திருவண்ணாமலையுள் எழுந்தருளி இருக்கின்றவனே, தேவர்கள் தலைவனே, உன் திருவடிகளைச் சேர்ந்தால் அல்லாமல், நான் சேர்வதற்கு வேறு இடங்காணேன் என்பது.

விளக்கம்:

உயிர் இல்லாத உலகங்கள்– ஐம்பெரும் பூதங்களும் கதிரவனும் திங்களும் ஆவன. ஐம்பெரும் பூதங்களும் வேறு வேறு உருவம் அடைந்து இயங்குதலும், கதிரவனும் திங்களும் உருவத்துடன் அமைந்து இயங்குதலும், இறைவனுடைய ஆற்றலினாலே உண்டாகின்றன. உயிர் உலகிற்கு இறைவன் உயிராய் நின்று இயக்குகிறான். பெருவினை பிறப்பு – பெருவினையினாலுண்டாகும் பிறப்பு. இனம் பற்றி இறப்பும் உடன் கொள்ளப்படும். கட்டினால் உயிர்களுக்குப் பிறப்பு இறப்பு உண்டாதலின், பிறப்பு என்பதற்குக் கட்டு என்று பொருள் உரைக்கப்பட்டது. அது ஆகுபெயர்.

'பெருவினைப் பிறப்பு வீடு" என்பதனை மாணிக்கவாசக சுவாமிகள் பந்தமுமாய் வீடும் ஆயினார்க்கு" என்று திருப்பொற்சுண்ணத்தில் கூறி அருளினார். 'நின்ற' என்பது எப்பொழுதும் நிற்கிற என்று பொருள் பட்டுத், தெளிவினால் நிகழ்காலம் இறந்த காலம் ஆயிற்று (நன்னூல் பொது இயல் 34 – ம் சூத்திரம்) கோ – தலைவன். ஆண்பால் விகுதியாகிய னகர ஒற்றுப் பெற்றுக் கோன் என வருதலும் உண்டு. மாடு – இடம்.

*நன்றி : தேவார அருள் முறைத்திரட்டு*

*கோயிற்கிரியைகள்:*

# கும்பாபிஷேகத்தில் இடம் பெறும் ஒழுங்கு உணர்வுருக்கம் நித்திய நைமித்தியத்திலும் இடம் பெற வேண்டும்

- இலக்கிய கலாநிதி பண்டிதர் மு. கந்தையா -

நமது சமயம் சைவ சமயம். சைவ சமயத்தவராகிய நமக்குச் சிவபெருமானே முழுமுதற் கடவுள். கடவுள் என்ற பெயரி லக்கணத்திற்குச் சரிமுறையான கடவுள் அவரேதான். அதாவது , சாமானிய நினைவு, சொல், செயல்களின் எட்டுமளவுக்கு அப்பாலாய் அவை எல்லாவற்றையுங் கடந்து நிற்பவர் அவர். "பாதாளம் ஏழினுங் கீழ் சொற்கழிவு பாதமலர் போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே". அதேவேளை, தம்மை நன்றாக உணரும் ஞானிகளின் உணர்வுக்கு ஒரு வகையில் எட்டுபவர் அவர். அதுவும் அவர்கள் "நானும் எனதும்", என்ற உணர்வு நிலைகளை முற்றாக இழந்து சகல விதத்திலும் தான் (சிவன்) ஆகவே நின்று உணரும் போது நழுவுமானால் அவர்களுக்கும் "டிமிக்கி தான் அற்றோம்.

சைவபரம்பரையில், உரிய முறையில் நின்று சிவபெருமானை உணர்வினால் எட்டும் பாக்கியம் வாய்க்கப் பெற்றவர்களாக உள்ள சிலருள் அகிலப் பிரசித்தி பெற்றவர்களாக உள்ளோர் தமது சமயா சாரியர் நால்வர். அவர்கள் கோயில்களில் தம்மை (சிவனை) அகக் கண்ணால் மட்டுமன்றிப் புறக்கண்ணாற் கூடக் காணுந் தகைமை சிவபிரானால் அவர்களுக்குப் பிரத்தியோகமாகக் கொடையாக வழங்கப் பட்டிருந்ததற்கும் அவர் வரலாறுகளிலும் அவர்களின் அருளிச் செயல்களான தேவார திருவாசகங்களிலும் நிரம்ப ஆதாரமுண்டு. இருந்தும், சில சிலபோது அவர்களே சிவனைக் காணத்தவறியதன் சார்பான கவலைக்குரல்கள் கூடத்திருமுறைகளில் இல்லாமல் இல்லை.

"உன்னை எப்போதும் நினைய ஒட்டாய்நீ நினைப்புகில் பின்னை அப்போதே மறப்பித்துப் பேர்த் தொன்று நாடுவித்தி".

*– அப்பர் சுவாமிகள்*

.......................................................................................................

.......................................................................................

*நாயி லாகிய குலத்தினுங் கடைப்படும்.*
*என்னைநன் னெறிகாட்டித்*
*தாயி லாகிய இன்னருள் புரிந்தவென்*
*தலைவனை நனிகாணேன்*
*தீயில் வீழ்கிலேன் திண்வரை உருள்கிலேன்*
*செழுங்கடல் புகுவேனே!*

- மாணிக்கவாசகர்.

இனி அப்பரும் பிள்ளையுமாய் அணைத்துக் குலாவி உலாவி வந்த திருநாவுக்கரசு சுவாமிகளுக்கும் திருஞானசம்பந்த சுவாமிகளுக்கும் திருவாய்மூர் என்ற தலத்தில் நடந்த ஒரு அற்புதம் இதோ!

திருமறைக் காட்டில் உறங்காமல் உறங்கும் திருநாவுக்கரசருக்கு, 'வாய்மூருக்கு வா' என்று அவரறிவில் உணர்த்திய சிவபெருமான் அவரைப் பின் வரவிட்டுத் தான்முன்னே விரைகின்றார். அவரை எப்படியாவது எட்டிவிட முயன்ற அப்பர் நடைவேகம் தோல்வி கண்டுவிடுகிறது. திருமறைக் காட்டில் அப்பர் இருந்த மடத்திற்கு அடுத்த மடத்திலிருந்த திருஞான சம்பந்தர், அப்பர் தமக்குச் சொல்லாமற் கொள்ளாமல் புறப்பட்டுவிட்ட செய்தி அறிந்து அவரைப் பின்தொடர்கிறார். தொடர்ந்து வந்து திருவாய்மூரில் அப்பரை எட்டி விடுகிறார்.

அப்பருக்குக் குதூகலம் பொங்குகிறது. ஆஹா! இதோ வந்து விட்டார் ஆள். திருமறைக் காட்டில் எடுத்த திருப்பாட்டிலேயே திறந்தகதவு அடைக்கப் பாடி விட்ட ஆள் வந்து விட்டார். இனியும் இவருக்கும் உவர் தம்மை மறைப்பாரோ பார்க்கலாம் என்று பாட்டாகவே பாடிவிடுகிறார் அப்பர். அப்போது தன்னைக் காட்டிய சிவபெருமான், காட்டியது திருஞானசம்பந்தருக்கு மட்டும் தான். அவர் கண்டு காட்டவே அப்பர் கண்டதாகச் செய்தி. சிவபெருமானைக் காணும் விஷயத்தில் அப்பரான அப்பருக்கே வேதனையுஞ் சோதனையுமாகிறது.

மேல், சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் தாமாகவே தோழமை உரிமை வழங்கியிருந்தவர் சிவபெருமான். தம் இருப்பிடங்கள் சிலவற்றுக்குச் சுந்தரர் போய்ச்சேர முன்னமே சிவபெருமான் எதிர் வந்து வரவேற்ற செய்திகளும் அவர் வரலாற்றில் உண்டு. அவற்றுக்குத் தேவார அத்தாட்சி களுமுண்டு. இருந்தும், ஒரு தடவை அதுவும் கண்மறைந்த நிலையில், சுந்தரர் திருவெண்பாக்கம் என்ற தலத்திற் சென்ற போது சிவபெருமான் அவருக்குத் தோற்றப்படவில்லை. ஒரு சுவாரசியமான கட்டம் இது.

'குழையுடைய வடிகாதா கோயிலுளாயோ – சுந்தர் கேள்வி'. 'உளோம் போகீர்' (ஆம் நான் இங்கேதான், மினக்கெடாமல் போய் வாரும்) – சிவபெருமான் பதில்.

குழையுடைய வடிகாதா கோயிலுள்ளா யோவென்ன
உழையுடையான் உள்ளிருந்து உளோம் போகீர்
என்றானே. நண்பனான நண்பனுக்கு சிவன் அந்நேரம் கடவுள் ஆகத்தான் இருந்திருக்கிறார்.

உண்மை உணர்ந்த சைவஞானிகளால். உண்மைச் செய்திகளென உறுதிப்படுத்தப்பட்டவற்றிற் சில இவை. இவை எல்லாம் இங்கு ஏன்? எதற்காக?

தன்னால் ஆட்கொள்ளப் பட்டுத் தன் வாரிசுகளெனப் பிரசித்தமாக ஏற்றுக்கொள்ளப் பட்ட மெஞ்ஞானச் செல்வர்களுக்கே இப்படிப் பண்ணுஞ் சிவபெருமானை, அஞ்ஞானம் நீங்காத நம்மவரும் அறியாமலே அறிந்தது போலவும், காணாமலே கண்டது போலவும் நாளடைவிற் பாவித்துப் பயின்று பயிற்சி வசத்தால் கால கதியில் உண்மையாக அறிந்து உண்மையாகக் கண்டு ஞானப்பேறு பெறவைக்கும் அர்த்தமுள்ள, அனுபவசாத்தியமான உபாயமொன்று நம்சைவத்தில் இருக்கும் போது அதன் அருமையென்ன பெருமையென்ன என உற்றுணர வைப்பதற்குத்தான். அத்துடன், அவ்வுபாய அநுசரணையில் நம் பயில்வுஞ் செறிவும் இருக்கும் நிலைக்கெதிர் யதார்த்தத்தில் அது இருந்தாக வேண்டிய உண்மைநிலையை மீளாய்வுக்குக் கொண்டு வருவதற்குந்தான். மேலும், தன்னைக் காணும் உத்தரவாதம் பெற்றவர்களுக்கே சமயா சமயங்களில் 'டிமிக்கி' விட்டுவிடும் சிவபெருமானை இன்னமும் ஒருதகுதியும் பெறாதிருக்கும் நம்மவரும் பாவனை மூலம் நினைவார் போலவும் செயற்கை வடிவுகளாற் காண்பார் போலவும் நம்உள இயல்புகளுக்குப் பொருத்தமாக, அதேவேளை ஞானாசார மரபுக்கு விரோதமில்லாத வகையில் நினைந்தும் கண்டும் பயன்பெற உபாயம் வகுத்துள்ள சைவவிவேகத்தை எண்ணி மகிழவைப்பதற்குந்தான்.

தன்னியல்பில் சச்சிதானந்த மயமாயிருப்பவர் சிவபெருமான். அந்நிலையில் எங்கும் வியாபக மாயிருக்கும் அவரை ஏகபோகமாகக் கண்டுகளிக்கும் வாய்ப்பு மெஞ்ஞானிகளுக்கே உண்டு. அதிற் சுவைகண்ட மெஞ்ஞானிகள் அவரை எங்குங் காணுங் காதல் மேற்கொண்டு நாடு, நகரம், கோயில், குளம் எங்கும் ஓய்வொழிவின்றித் திரிந்து கொண்டிருப்பர். எங்கள் நால்வர் பெருமக்கள் சீவியபரியந்தம் திரிந்து திரிந்து தலயாத்திரையில் ஈடுபட்டிருந்தது இதற்கேதான். கோயில்களில் மட்டுமல்ல, கோயில் செல்லும் வழியிலுள்ள நாடு, நகரம், சோலை, குளம், கடற்கரை, மலைச்சாரல் எல்லாவற்றிலும் அவர்களுக்கு அதே காட்சிதான். சிவனோடு சிவனாக அவரது காட்சிக்கு இடமாயிருந்த சோலை, குளம் முதலியவற்றையுஞ் சேர்த்துப் பாடினார்கள்.

பூவில் தேன் நுகரும் வண்டின் காட்சி, அம்மானை விளையாடும், ஊஞ்சலாடும் மகளிர் காட்சி, பொற்சுண்ணமிடிக்கும் மகளிர் காட்சி, சோலையில் மிழற்றுங்குயில், கொஞ்சுங் கிளிகளின் காட்சி ஏன்? மார்கழி நீராடுங் கன்னியர் ஆரவாரம், கலகலப்பு, கிளுகிளுப்பு ஒன்றுமொழியாமல் சேர்த்துங்கூட எல்லாவற்றையுஞ் சிவனோடு சிவனாகவே கண்டு மாணிக்கவாசகர் பாடியருளிய திருவாசகம் இருக்கிறதுதானே! அதுவே இதற்கு உதாரணமாகப் போதுமே.

இவ்வகைக் கடவுட்காட்சியும் வழிபாடும் அவர்கள் அளவில்மட்டும் நின்றுவிடுவதற்கில்லை. சிவன் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய் அனைத்துயிரின் கண்ணும் அவ்வுயிர் தன்னை அறியாவாறே உள்ளார் என்பது மட்டுமல்ல, ஒவ்வோருயிரும் தன்னை யாதேனுமொரு வகையில் நினைந்தாக வேண்டிய முன் நியமத்தையும் ஏற்படுத்தியுள்ளார் என்பதும் ஞானக் காட்சியே தான். எருமைகூடத் தன்வடிவிலாவது கடவுளை நினையாதிருக்க முடியாது எனச் சுவாமி விவேகானந்தர் ஒருகாற் கூறியுள்ளமை இதற்கு நிதர்சனமாம். இங்ஙனமாக, விசேட அறிவுக்கும் விவேகத்துக்கும் உரியவன் ஆன மனிதன் விசயத்தில் இது மகா முக்கியத்துவம் பெறுகின்றது. மனிதனுக்கு இங்ஙனம் இயற்கையாக உள்ள இந்த நிலையை ஆதாயப்படுத்தி மற்றும் பிராணிகளிலும் பார்க்க விசேடமாக அவனது கடவுள் சிந்தனையை நெறிப்படுத்தி வளர்த்தெடுப்பதற் கென்றே அமைந்தவை சைவாலயங்கள்.

கடவுளை நினையக் கோயில் தேவையில்லை என்பாரும் இருக்கலாம். அவர்கள் ஏனைய பிராணிகள் நினையுமளவுக்குத் தமது கடவுள் நினைவுத் தேவையை மட்டுப்படுத்திக் கொள்பவராயிருக்கலாம். அதுபற்றிக் கவலையில்லை. மனிதனுக்கியல்பான கடவுள் நினைவை நெறிப்படுத்தச் சைவக்கோயில் என்னவகையில் உதவுவதாகும் என்பதே இங்கு விஷயம்.

நினைவென உள்ளது எதுவும் அதற்கு முன்நிலையான ஒரு பொருளைப் பற்றி அவ்வது எழுவதில்லை என்பது பிரசித்தம். மேற்கண்டவாறு சமயா சாரியர்க்கு முன்னிலையாயிருந்த சச்சிதானந்த சொரூபம் நம்மவர்க்குப் பொருந்தாது. அதனால் அதற்கொரு மாற்றீடு அவசியமாகிறது. நல்லவேளையாக அவர்களுக்குச் சச்சிதானந்த சொரூபமாகப் புலப்படுஞ் சிவனே சிலதருணங்களில் தானாக அவ்வாலயங்கள் கொண்ட சோதிரூபமாக அவர்களுக்குப் புலப்பட்ட காட்சிகளும் அவர்கள் வாக்கிலேயே வந்துள்ளன. "தோடுடைய செவியன் விடையேறியோர்...." "மருவார் கொன்றை மதிசூடி மாணிக்கத்தின்......." இவை போல்வன நம் திருமுறைகளிற் பிரமாதம்.

இனி, தமிழில் திருமுறைகள் தோன்றுதற்கு வெகுகாலம் முன்பாகவே சமஸ்கிருதத்தில், சிவாகமங்கள் தோறும் சிவன்வாக்காக இவ்வகையில் வெளிவந்திருக்கும் தியானமந்திர சுலோகங்களும் அதிற் பிரமாதம். இவை குறிக்கும் வடிவங்களை நம்மவரின் கடவுள் நினைவுக்கு முன்னிலையாக நாட்ட எண்ணிய விவேகம் சைவ விவேகத்தின் முதல்நிலையாகும். இனி, இவற்றை அறிவிக்குந் திருமுறைப்பாடல்களும் சிவாகம சுலோகங்களும் நாம் வாழும் அசுத்த மாயா மண்டபத்துக்குரியனவாகா. இவையெல்லாம் சுத்த மாயா மண்டலஞ் சார்ந்த சிதாகாசத்திற்குரியவை. திருமுறை ஓதுவோர் திருச்சிற்றம்பலம் சொல்லித் தொடங்கித் திருச்சிற்றம்பலம் சொல்லி முடித்தலும் சிவாகம சுலோகங்கள் ஓதுவோர் 'ஓம்' சொல்லித் தொடங்கி 'ஓம்' சொல்லி முடிப்பதும் இவ்வுண்மைக்கு நிதர்சனமாகும். சித்–ஞானம்; அம்பலம்–ஆகாசம் சித்தம்பலம் ஞானாகாசம். எங்களை அசுத்த மாயா மண்டலஞ் சார்ந்த ஆகாசம் போல் தூலதோற்றம் ஆகாமல் சூக்கும (நுண்) ரூபமாயிருப்பது சிதாகாசம். ஆகல் பற்றி அது சிறுமை (நுண்மை) + ஆகாசம் = சிற்றாகாசம் எனவும் அதே பாங்கில் சிறுமை + அம்பலம் = சிற்றம்பலம் எனவும் ஆம். எனவே, சித்தம்பலம், சிதம்பரம், சிதாகாசம், சிற்றம்பலம், தஹராகாசம் எனும் ஐந்தும் ஒன்றே. தமிழில் அம்பலம், சமஸ்கிருதத்தில் அம்பரம்; தமிழில் சிறுமை சமஸ்கிருதத்தில் 'தஹர'.

திருமுறைகள், சிவாகம மந்திரங்கள் சிதாகாச ஒலிகள் ஆதல் போல அவை குறிக்குஞ் சிவமூர்த்தங்களும் சிதாகாசத்துக்குரியவை. அதனால் இம் மூர்த்தங்களைத் தாபிக்கக் கருதும் இடமாகிய ஆலயம் கருத்தளவிற் சிதாகாசம் ஆதலே அமையும். ஆலயத்தை அமைக்கும் சிற்பிகளும் அதைப் புனிதமுறுத்தும் சிவாசாரியர்களும் சிதாகாசமாய் அமைதற்காம் திவ்விய பார்வையுடனும் தியானமந்திர பாவனையுடனுமே அமைக்கிறார்கள். அதனால்தான் சைவாலயம் கைலாசத்துக்குச் சமமாகப் போற்றப்படுகிறது. இனி, இங்கு ஸ்தாபிக்கப்படும் வடிவங்கள் சிவாகம தியான சுலோகங்களும் திருமுறைகளும் குறிக்கும் அமைவுகளுக்கேற்பச் சிற்பியின் தியானபாவனை வலுவால் அற்புதமாக உருவாகின்றன. கருங் கல்லிலோ, உலோகத்திலோ அவை உருவாகுமளவில் அவை மூர்த்தம் ஆகவே இருக்கும். உரிய சத்திகளின் பின் கர்ப்பக்கிருஹத்திற் சேர்த்தி அஷ்டபந்தனஞ் செய்து மஹாகும்பாபிஷேகக் கும்பத்தினின்று தெய்வீக அங்க அவயங்கள் ஏற்றப்பட்டுப் பிறகு கும்பநீரால் அபிஷேகமுஞ் செய்யப்பட்டதன் மேல் பிராணப் பிரதிஷ்டையும் நிகழ்ந்த பின்னே அது மூர்த்தி ஆகிறது. அம்மூர்த்தியே வழிபடற்காந் தகுதியுள்ள சுவாமி ஆம்.

இங்ஙனம் மூர்த்தத்தை மூர்த்தி ஆக்குஞ் சாதனமாய் அமைவது ஆலய கும்பாபிஷேகம். பலகாலும் பலரும் கண்டுசீரிக்கும் நிகழ்ச்சி ஆதலின் இதற்கு விபரவிளக்கம் வேறு வேண்டா. எனினும் அவசியமாக இதுபற்றிய ஒன்று கருதப்படவேண்டும். மூர்த்தத்தை மூர்த்தியாக்குவதில் மேற்கொள்ளப்படும் அதிஉயர் பட்சமான ஆத்மீக சாதனையும் அதிகஷ்டதரமான பிரயாசையும் அதி உன்னத சிரத்தையும் அதுவாகும். கும்பாபிஷேகத்துக்கு நேர்படுஞ் சிவாச்சாரியர் சாமானியமான தமது ஆசாரசுத்தி அனுட்டானக் கிரியைகளின் மேலும் பஞ்சசுத்தி பண்ணிச் சுயசிவபூஜையாற்றியதாற் பொங்குஞ் சிவக்களையுடன் இருந்து பிராசாதயோக நெறி பற்றி நிகழும் அதிகஷ்டதரமான தியான பாவனைகளால் தம்மை ஒடுக்கி ஒடுக்கித்தாமாந் தன்மையை முற்றாக இழந்து முற்றிலுஞ் சிவனாகவே ஆகிவிடுகிறார். அதன்மேல் பிரத்தியேகமான ஏற்பாடுகளுடன் தயாரிக்கப்பட்ட மஹாகும்பாபி ஷேகத்தில் தம்மையே உருக்கியெடுக்குந் தியானவலுவால் கருதப்பட்ட மூர்த்தியை வரத்தி அமர்த்துகிறார். அதன் தொடர்பில் வெகுவிஸ் தாரமான அளவில் ஆம் நவகுண்டபூஜையில், விசேட ஹோமங்கள் நடைபெறுகின்றன. இச்சிவாச்சாரியர் விஞ்சியிருக்குஞ் சிவசக்தியை கறந்து ஓமாக்கினியிற் பாய்ச்சுகிறார். அக்கையோடு பஞ்சபூதங்களிலும் வியாபித்திருக்குஞ் சிவசக்தி முழுவதையும் கூட வரத்தியெடுத்து அக்குண்டத்திற் பாய்ச்சுகிறார். அவர் பொறுப்பிலுள்ள பிரதான குண்டத்துக்குத் துணையாகச் சூழவுள்ள மற்றைய எட்டுக் குண்டங்களிலும் அவ்வகையில் விளைவிக்கப்படும் சிவசக்தி முழுவதையும் பகீரதப் பிரயத்தனத்தாற் பிரதான குண்டத்திற் சேர்த்துக் கொள்கின்றார். இவ்வகையால் வந்துகூடும் சிவசக்தி முழுவதையும் பிரதானகுண்டத்திலிருந்து நாடிசந்தான மூலம் மகாகும்பத்திற்கு ஏற்றுகிறார். இவ்வளவுக்குமான கிரியா வீதங்கள் இராப்பகலாகத் தொடர்ந்து குறைந்தபட்சம் மூன்றுதினங்கள் இடம் பெறுகின்றன.

நாடிசந்தானம் பண்ணிக் குண்டத்திலுள்ள சிவசக்தி கும்பத்திற் சேர்க்கப்பட்டபின் மகா கும்பத்திலிருந்து கர்ப்பக்கிருகத்திலுள்ள மூர்த்தத் திற்கும் நாடிசந்தான மூலம் அது தொடர்பு படுத்தப்படுகின்றது. அதன்மேல் மகா கும்பம் வீதிவலமாக எழுந்தருளி வந்து அம்மூர்த்தத்திற்கு அபிஷேகமாகிறது.

'அப்பாலைக்கப்பாலை பாடுதுங்காண் அம்மானாய்' என்றார் மாணிக்கவாசகர். இதற்கு

மேலும் ஓர் அப்பாலை கூட்டி 'அப்பாலைக் கப்பாலைக் கப்பாலானை ஆருரிற் கண்டடியேன் அயர்த்தவாறே என்றார் அப்பர் சுவாமிகள். இத்தகையது இங்கு வரவழைத்து இருத்தப்படும் தெய்வத்தின் அருமை. அதை வரத்தியிருத்திய சிவாச்சாரியரின் சிரத்தையின் அருமை அதனினும் பெரிது.

இப்போது நிலையென்ன அரியதிலரிய தொன்று பெரியதிற்பெரிய சிரத்தையால் நமக்காக நாம்காண்பார் போற் காண, நினைப்பார்போல் நினைக்க, தாமும் தொழுவார்போல் தொழ, அதன் கடாக்ஷம் பெற்றார்போல் நாம் மகிழ்ந்து பூரிக்க ஏற்ற ஒருவிதத்தில் நமக்குத் தரப்பட்டிருக்கிறது. இது முற்றுமுழுதாகச் சைவவிவேகம் நமக்களித்த பரிசு. இதற்குள் இன்னுந்தான் எத்தனை யெத்தனை விசேடங்கள். நாமோ உருவுடலின்றி வாழமுடியாத சென்மங்கள். கண்ணாற் பார்த்துச் செவியாற் கேட்டு மூக்கால் முகர்ந்து நாவாற்சுவைத்து, தோலாற் பரிசித்தன்றி வாழ முடியாத சீவன்கள். இங்கு மூர்த்தியாக்கப்பட்டிருக்கும் மூர்த்தமும் மந்திர நியாசத்தாற் சீவகளையூட்டப்பட்ட கண், காது, மூக்கு, வாய், தோல் என்பவற்றோடு கூடியதாகின்றது.

ஆனால் ஒரு வித்தியாசம் மட்டும் நமது கண், செவி முதலானவை அசுத்தமாயைப் படைப்புக்களாய் அதற்கியல்பான அஞ்ஞான மயக்கதியக்கங்களோடு கூடியவை. அதனுடைய கண், செவி, முதலாயின அதற்கெதிர் சுத்தமாயை சார்ந்த சிதாகாசப் படைப்புக்களாய் அதற்கியல்பான ஞானப்பிர காசத்தோடு கூடியவை. (மந்திரங்கள் சிதாகாசப் படைப்பல்லவா?). அஞ்ஞான மயக்கத்திலிருந்ததால் நம்கண் அம்மூர்த்தியைச் சரியான கோணத்திற் காணுமோ சொல்ல முடியாது. ஆனால், அதன்கண் தன்ஞானப்பிரகாசத்தினால் நம்மைச் சரியான கோணத்திலேயே காணும். நம் செவி அஞ்ஞானமயக்க தோஷத்தோடுள்ளமையால் சரியானதைச் சரியாகக் கேட்குமோ சொல்ல முடியாது. ஆனால், அதன் செவி தன்ஞாவிசேடத்தினாற் சரியானதைச் சரியாகவே கேட்கும். இதனால் அதனோடு புழங்கும் விஷயத்தில் மிக எச்சரிக்கையாய் இருக்க வேண்டிய கட்டுப்பாடு நமக்கிருக்கும். சுவாமி வழிபாட்டுக்குப் பக்தியோடு பயமும் வேண்டும் என்பது இதனாற்றான். "அடிகேள் உமக்காட்சிசெய அஞ்சுதுமே! " எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளே பயந்து கெலித்ததுமுண்டு.

இதே பாங்கில் நமக்குள்ள மனம், புத்தி, சித்தங்கள் மந்திர நியாசத்தால் உள்ளன. அவையும் நம்முடைய நிலையற்ற மனம். தடுமாறும் புத்தி, கலங்குஞ்சித்தம் போலாது ஸ்திரமான மனம், நிலையான புத்தி, கலங்காச்சித்தங்களாயே இருக்கும். இதே பாங்கில் இருதயம், வயிறு முதலிய அங்கங்கள் கூடச் சிவசுத்தப் பான்மையாக அதற்குள்ளனவே. இவையெல்லாம் ஏலவே மகாகும்பம் அமைக்கும்போது அதில் மந்திரநியாசமாக நியமிக்கப்பட்டு மேல், பூஜை, உபசாரங்களால் உறுதிப்படுத்தப்பட்டுப் பின் அபிஷேகத்துக்குச் சற்றுமுன்னாக மூர்த்தத்தில் (கும்பத்திலிருந்து பிம்பத்துக்கு) ஏற்றப்பட்டவை.

இவை எல்லாவற்றையும் தொகுத்து இயைத்துப்பார்த்தால் கும்பாபிஷேகம் நமக்குப் பொறுப்பித்துள்ள பொறுப்பாவது:

உங்கள் நலத்துக்காக உங்கள் அங்காவயவ ஞானேந்திரிய கன்மேந்திரியங்களுக்குச் சமாந்தரம் போலவுள்ள சுத்த ஞானமயமான அங்க அவயவ அமைப்புக்கள் உள்ளதாய் ஒரு மூர்த்தி உங்களுக்குத் தரப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் உங்களை நீங்கள் பேணுமளவிற்காவது அதனைப் பேணும் முறையாற் பேணி உங்கள் ஆன்மநலனை ஆக்கிக் கொள்ளுங்கள்" என்பதாம்.

இப் பொறுப்பை ஏற்றுநடத்தும் ஆலயக் கிரியைகள் நித்தியம், நைமித்தியம் என

இருவகையின. இவற்றின் அடிப்படைப் பண்பாவது கும்பாபிஷேகத்தினால் ஆலயத்தில் வருவிக்கப் படவிருக்கும் சிவசாந்நித்தியம் என்றும் மங்காதிருக்க வைப்பதும், இயல்பிலே அவரிடத்தில் இருந்துவரும் சீவசிவசம்பந்தம் மேல்மேல் வலுவுற்றுவரச் செய்வதுமாய் இருக்கும்.இவற்றைச் செய்வோர், செய்விப்போர் நோக்கும் "சைவாலய வளாகம் கைலாயம், சிதாகாசம், சுத்தமாயா மண்டலம்" என்ற அதன் இயல்புநிலை நாம் வாழும் அசுத்தமாயா மண்டலத்துக்குரிய விகாரநிலைகளால் நலினமுறாமற் காப்பதும் ஆலயத்தில் உண்மையான சிவக்களை மென்மேலும் ஜொலிக்க வைப்பதுமாயிருக்கும். உச்சாரணக் கிரமப்படியான மந்திரஒலி, வேதஒலிகளும் உள்ளூரகி ஓதப் பெறும் திருமுறைப் பிரார்த்தனை ஒலிகளும், சுத்தநாதமான தாளவாத்திய ஒலிகளும் இந்தநிலையை நிலவுவதற்கு மிகவும் ஏற்புடையனவாய் இருக்கும். ஒளி விஷயத்தில்கூட நெய்த்தீப ஒளியும், கற்பூர ஒளியுமே இதற்கு உதவக்கூடியன என்பர். ஒலிவகைகள் மிடற்றொ லியளவினவாயும், தாளவாத்திய இயல் பொலியளவினவாயும் இருத்தலே அமையும். கோயில் வளாகத்தின் சிதாகாசப்பண்புக்கு ஊறு விளைவிக்கும் வகையில் இவ்வொலிகள் பெருக்கப்படுதலும் அதேவகையில் காந்த விளக்கொளி, மின்குமிழ் விளக்கொளிகளால் இயல்பான கோயில் ஒளிப்பட அலைகள் விரிக்கப்படுதலும் அதாவது ஒலிபெருக்கி, ஒளிவிரிப்பிகளின் உபயோகம் கோயில் வளாகத்திற்குப் பொருந்தாது என்ற அறிந்தோர் அபிப்பிராயம் என்றென்றும் இருந்து கொண்டே வருகிறது. "கொஞ்சம் ஆழமாகப் பார்த்தால், எத்தனை பேருடைய படிப்பை நித்திரையைக் குழப்புகின்ற ஒலி பெருக்கிக்கும் கடவுள் வணக்கத்துக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. யாரோ சிலருடைய தவறான நடவடிக்கைதான் காரணம். கோயில் திறந்து ஆரம்ப அலுவல்கதை தொடங்கும் போதோ அதற்கும் முன்னரோ ஒலி பெருக்கியை இயக்கவிடுவது வழக்கமாய் விட்டது"

- உதயன் - 10 -08. இஃதிருக்க,

அங்கிங்கெனாதபடி எங்கெங்குந் தானாயிருந்து அதிர்வு மிக்க இடியொலி, எரிமலை வெடிப்பொலிகளைக் கேட்டுக் கொண்டும் அகோரம் மிக்க காட்டுத்தீயொளி, எரிமலைச் சுவாலை ஒளிகளைக் கண்டுகொண்டும் இருந்துவருஞ் சிவனுக்கு இவ்வொலிபெருக்கியும், ஒளிவிரிப்பியும் ஏதோ பெரிதோ? ஏற்பாரும் இருக்கலாம். அதை ஆமோதிப்பாரும் இருக்கலாம். அவர்கள் இருபாலரும் அதுதவறென்பதன் பின்னணியைத் தெரிந்து கொள்ளுதல் விரும்பத்தகும்.

சிவனியல்புக்கு இவை பொருந்துமோ என்பதே இங்கு விஷயம். எங்குமுள்ள சிவன் தன்னிற்தானாயிருக்கும் சிவன், அவர் அதிர்வொலி, அகோரவொளிகளைக் கண்டிருப்பதில் ஒரு புதுமையுமில்லை. ஆனால் இங்கு ஆலயங் களிலிருப்பது அதைக் காணமுடியாத நம்தேவை க்கென குறிக்கப்பட்ட சில நியமங்களின் பேரில் நம்மால் வரத்திக் கொள்ளப்பட்ட சிவம். இது நமக்குப் பலனாதற் பொருட்டு நாமே நம்தியான பாவனைகளால் சிதாகாசவளாகத்தை இங்கு அழைத்து அதில் சிவனை வரத்தியுள்ளோம். நம் நோக்குக்கமைய நாம் வரத்திய சிவனுக்குப் பொருந்த நாம் அமைத்துக் கொண்ட சிதாகாய சலுழ்நிலை களங்கமுறாமல் நம் தேவைநோக்கிற் பார்த்துக் கொள்ள வேண்டிய நாம், எம் இலக்குக்கு மாறாக நடந்து கொள்வது தவறாதல் தற்கரீதியான முடிபாகும். சிதாகாசத்தின் நுண்மைக்கு இப் பூதாகாச ஒலிகளின் பெருமை விரோதமாகும். நாம் வரத்தியிருக்கும் பொருளின் குளுமையையும் அதனை வரத்துதற்கு நாம்பட்ட சிரமத்தின் அருமையையும் இங்கு நாம் ஆரம்பத்திற் கண்டவாறு மீள்நினைவு

படுத்திக் கொள்ளல்மூலம் இத்தகைய ஆசங்கைகளை விரட்டியடிக்கும் தீரமுள்ளோர் ஆவோம்.

இப்பண்புகளைப் பேண அமையும் அவயபூசைவகை இரண்டில் நைமித்தியத்தை விட நித்தியம் முக்கியமென வற்புறுத்த வேண்டிய அவசியத்தை இன்றைய நடைமுறை தெரிவிக்கின்றது. நித்தியம் இரேசு. நைமித்தியந்தான் வீச்சு. நித்தியம் சும்மா சாமானியமாயிருந்தாற் போதும். நைமித்தியந்தான் வரன் முறையாக நடந்தாக வேண்டும் என இன்று நிலவும் போக்குத்தவறானது. நித்தியத்திற்குஞ் சரி நைமித்தியத்திற்குஞ் சரி பூசை நோக்கிலான அடிப்படை ஒன்றே. கும்பாபிஷேகத்தில் இடம்பெற்ற சிவக்களை தளம்பாதிருக்க வைத்தற்கே இரண்டும். அதில் இடம்பெற்ற பஞ்சசுத்தி, ஆவாஹானம், அபிஷேகம், நைவேத்தியம், அர்ச்சனை, வேதமோதுதல், திருமுறையோதுதல், பிரதஷிணம் நமஸ்காரம் என்ற பிரதான பூசை நிகழ்வுகள் இரண்டுக்கும் ஒரு தன்மையனவே இரண்டிலும் பூசைக்குரிய மேற்குறித்தவை சார்ந்த தூய்மை, சிரத்தை, உள்ளுணர்வுருக்கம், அர்ப்பணபுத்தி ஆகியன ஒரே தன்மையாக நிலவ வேண்டியனவே. விரயமாக்குந் திரவியத் தொகை முண்டமண்டலவிரிவு, அலங்கார சாதனங்கள்,அணிமணிகள் என்பன கும்பாபிஷேகத்தைவிட நைமித்தியத்திற் குறைவுபடலாம். நித்தியத்தில் அவையாக அடிமட்டத் தேவையளவில் குறைவு படலாம். அதனால் ஆம் பழுதேதுமில்லை. ஆனால், மேற்குறித்த பஞ்சசுத்தி ஆவாகனம் ஆதியன உரியதரத்திற் சற்றுக் குறைவுபட்டாலும் கூடச் சுவாமி அங்கு சமுகமாய் இருப்பதற்குப் பதில் வீமுகமாய் விடும். நித்தியத்தில் இந்த நிலை தொடர வைத்துக் கொண்டு நைமித்தியத்தில் பலன் காணலாம் என்பது ஏலவே முயலை நழுவ விட்டுவிட்டுப் பற்றையை அடித்தலுத்தல் போலாகும் என்பர். நித்தியத்திற் குறைதீரச் செய்வது நைமித்தியம் என்பது நித்தியத்தில் அத்தியாவசியஞ் செய்ய வேண்டியதைச் செய்யாமல் விட்டுவிட்ட குறைதீர்க்கும் உபாயமாகாது. நித்தியத்தைத் தவறாமல் செய்கையில் தற்செயலாகவோ கைபிழைப்பாடாகவோ நேருந் தவறுகள் சாந்தியாவதற்கே உபாயமாம். எனவே நைமித்தி யத்திற் பொறுப்பைச் சார்த்தி விட்டு நித்தியத்தை நித்திய தரித்திர நிலையில் விட்டு விடலாகாது. முற்குறித்த பஞ்சசுத்தி முதல் பிரதாஷண நமஸ்காரம் வரையிலான முக்கிய பூசை நிகழ்வுகள் தினமும் சம்பூரணமாக நிறைவேறியே ஆகவேண்டும். பரார்த்த நித்திய பூஜாவீதி எனும் பெயரிலுள்ள பத்ததிகளில் இவை அனைத்தும் நித்திய நிகழ்வுகளாகவே வகுக்கப்பட்டுள்ளன.

இத்தகைய நித்திய பூஜை நியமங்களிற் பஞ்சசுத்தி என்பது பூஜிப்பவர் தன்னையும், தான் பூசிக்கும் இடத்தையும், பூசைத்திரவியங்களையும் மந்திரங்களையும், பூசிக்கும் இலிங்கத்தையும் அசுத்தமாயா புவனச் சார்பான குற்றங்கள் நீங்கிப் பூசைக்குரிய தெய்வீகத்தன்மை பொலியச் செய்து கொள்வதாம். பூசிப்பவர் தமது அசுத்தமாயா சரீரத்தை தத்தமது ஞானாக்கினியினால் அழிந்ததாகப் பாவித்துப்பின் திருவருட் பொலிவால் உருவான தெய்வீக சரீரம் உள்ளவராகத் தம்மைக் கண்டால் தன்னைச் சுத்தி செய்தலாம். பூஜைத்திரவியங்களிற் புறச்சுத்திக்கு அகப்படாமல் தப்பியிருக்கும் குணவிவகாரங்களான நுண் அழுக்குகளை மந்திர ஆற்றலாற் போக்கித் தெய்வீகமாக்கல் திரவிய சுத்தியாம். ஏனைய மூன்றும் மந்திரசுத்தி, தானசுத்தி, இலிங்கசுத்தி என்பன. இவற்றில் மந்திரசுத்தி அழுக்குநீக்கித் தெய்வீகமாக்கும் பண்புக்கு வேறானது. மந்திரங்களை இலக்கண ரீதியான ஒலியொழுங்கமைய உச்சரிக்கும் ஆற்றல் தமக்கு வாலாயமாயிருக்குமாற்றைப் பூசகர் பூசைவேளைகள் தோறும் உறுதி செய்து கொள்ளுதல் மந்திரசுத்தியாகும். பூசைப்பலன் உயர்பலனாக வைப்பதில் இப்பஞ்சசுத்திகளுக்கு முதன்மை

இருத்தல் தாயுமான சுவாமிகளாலும் போற்றப்பட்ட காரியம். "பஞ்சசுத்தி செய்து நின்னைப் பாவித்துப் பூசித்தால் – விஞ்சிய மெய்ஞ்ஞானம் விளங்கும் பராபரமே" என்பது பாடல்.

இப்பஞ்சசுத்தியைத் தொடர்ந்து நிகழ்வனவற்றில் முக்கியமானது ஆவாஹனம். ஆவாஹனம் என்றால் அழைத்தல். பூசிக்கப்படும் சுவாமியை உடனுக்குடன் அழைத்துப் பூசிக்கப்படும் மூர்த்தியை இருத்திப் பூசிப்பதுதான் பூசைமரபு. முதனாள் அழைத்து இருத்தப்பட்டதோ முன் கும்பாபிஷேகத்தன்று அழைத்து இருத்தப்பட்டோ கணக்கில் எடுக்கப்படுவதில்லை. தனக்குரிய அதீத இயல்புகளுக்கேற்ப இருக்கும் அதே இடத்திலேயே இல்லாதவர் போலவும் இருந்து விடக் கூடியவர் சுவாமி ஆதலால் நேற்றழைத்தோ மென்றதனாலோ முன் கும்பாபிஷேகத்தில் அழைக்கப்பட்டவ ரென்றதனாலோ அவர் அங்கிருத்தலை உறுதி செய்ய இயலாது. அக் காரணத்தால் பூசை புரியும் ஒவ்வொரு தருணமும் அவரை அழைத்தமைத்துப் பூசித்தல் பொருத்தமாகும். மகா உத்தம பக்தரான சண்டீச நாயனார் கூடதழைத்ததோர் ஆத்தியின் கீழ் தாவரம் (இலிங்கம்) மணலாற் கூப்பிவிட்டுச் சிவனை அழைத்துத்தான் பூசித்ததாகப் பேசுகிறது தேவாரம். எனில் நமக்கு அது விதியாதலில் ஆசங்கைக்கிடமேது ? அவ்வப்போது சுவாமியை அழைப்பதற்கென்று பிரசாதபோக நெறியென ஒருபாயம் உள்ளது. பூசகரென்றிருப்பவர் எவரும் அதை அறியாதிருக்க முடியாது. பற்றிச் சுவாமியை அழைக்கும் செயற்பாட்டில் இறுதிக் கட்டம் சுவாரஸ்யமானது. அழைக்கும் முறையாக அழைத்துச் சுவாமி தமது புஸ்பாஞ்சலிக்குள் வந்துவிட்டதை உறுதிப்படுத்தவேண்டி,

'சுவாமி நீ வந்து விட்டாயா?' – கேட்கிறார் பூசகர். ஆம் வந்துவிட்டேன் மகனே – சுவாமி பதிலளிக்கிறார். சுவாமிக்கு நல்வரவு – பூசகர் வரவேற்கிறார். இவ்வகையால் உறுதி பெற்றபின்னும் பூசகர் பிரார்த்திக்கிறார்.

"சர்வலோக நாயகரான சுவாமி, அடியேன் நிகழ்த்தும் பூசை முற்றாக முடியும் வரையும் இம்மூர்த்தத்திற் பிரீதிரூபமாக விளங்கியிருக்க வேண்டும். இப்படி முடிகிறது ஆவாஹனம்.

மேலும், வந்து விட்ட சுவாமியை அங்கு அமர்ந்திருக்கச் செய்து கொள்ளும் ஸ்தாபனம் என்பதொன்று. அடுத்தது சந்நிதானம். சந்நிதானம் என்றால் ஸ்தாபிக்கப்பட்ட சுவாமி பராக்காயிருந்து விடாமல் நடக்கவிருக்கும் கிரியைகளுக்கு முகஞ் செய்திருக்க வைத்தல். அவ்வளவுக்கும் மேல், பூசைமுடிந்து சுவாமி ஒய்வுபெற வேண்டும். பிரார்த்தனை நிகழும் வரை சுவாமி அம்மூர்த்தி வளாகத்தில் தடையுண்டிருக்கக் கோரப்படுவார். அதற்குச் சந்நிரோதனம் என்று பெயர்.

இவ்வளவும் நடந்தாகும் பட்சத்திலேயே பூசிக்கப்படும் மூர்த்தியிற் சுவாமி தங்கியிருக்கும் நிலை உறுதியாகின்றது. ஆலயமொன்றில் பூசைவழிபாடு நிகழ்த்துதற்கு ஆரம்ப நடவடிக்கையாக எவ்வளவு பொறுப்புணர்ச்சி வாய்ந்த, எவ்வளவு சிரத்தையோடு கூடிய கைங்கரியங்கள் நிகழ்ந்தாக வேண்டும் என்பதை இவ்விபரம் தெளிவாகக் காட்டுகிறது. விருந்துபசாரம் நடத்துதற்கு விருந்தாளியின் பிரசன்னம் எவ்வளவுக்கு இறயமையாததோ அவ்வளவுக்கு இன்றியமையாதது இதுவாகும். இது நடந்திலதேல் மற்று என்னென்னதான் செய்யப்பட்ட போதிலும் பூசைநடந்ததில்லை என்றமுடிவே தேறும். அவற்றில் எத்தனை சதவிகிதத்துக்கு நடைமுறையிலுள்ள பரார்த்த நித்திய பூசைகள் இடமளிக்கின்றன என்பது கேள்வி.

வந்தார் பூசகர், திறந்தது கதவு, எடுத்தார் குடத்தை, முடிந்தது அபிஷேகம், கையோடு தீபாராதனை என்ற 'திடுதிப்' அவதியில் ஏதோ நடந்து முடியும் கண்ணிறாவிக்காட்சி பலகோயில்களில் தரிசனமாவதாகப் பலரும் பேசிக் கொள்ளும்

நிலையுமுண்டு. சுவாமி ஸ்நானம் செய்வதில்லை, சுவாமி ஒன்றும் புசிப்பதில்லை இவையெல்லாம் சும்மா ஒரு பாவனைக்கு அல்லது மாதிரிக்கு என்ற எண்ணம் திணிந்து போயிருத்தலும் கண்கூடு. மேற்கண்டவாறு திவ்வியசரீரமும், உறுப்புக்களும், உணர்வுகளுமுள்ள சுவாமியைத் தியானமந்திர பாவனைகளால் நாமாக நிறுத்திவிட்டு, குறைந்தபட்சம் நம்மை நாம் பேணும் அருமைபோலாவது அதைப்பேணும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, மேல் ஏமாளிக்கருத்துக்கள் கற்பனைகளை சொல்லிச் சமாளித்துக் கொள்ளும் விதத்தால் நமது தீர்மானத்துக்கு விரோதமாக நாமே நடந்துகொள்ள என்ன அவதிதான் நேர்ந்துள்ளதோ நமக்கு! 'பூசிக்க வாராய்' என்று நம்மால் அழைக்கப்படாத நிலையிலேயே சுவாமிக்கு அது இலக்கணம். அழைத்து அமர்த்தப்பட்ட நிலையில் அதற்கு அது விலக்கணம் எனல் அறியத்தகும்.

நம் ஆலயங்களிற் பூசிக்கப்படும் மூர்த்திகள் எல்லாம் அருந்தி வருந்தி வரத்தப்பட்ட சுவாமிகள். அவற்றுக்கு நாம் ஊட்டியேயாக வேண்டும். யதார்த்தமான ஊட்டற்பண்பும் பரிவும் பொங்கத் தாராளமாக ஊட்ட வேண்டும். 'சுவாஹா' அங்கமான மூலமந்திரமோதிக் கௌரியின் வலதுகையால் சிவனது வலதுகையில் அன்னம் சேரக் கண்டு ஊட்ட வேண்டும். 'இனிப்போதும் எடு' என்று சுவாமி அருளக் கேட்பதான பிரஜ்ஞை ஏற்படும்வரையும் ஊட்ட வேண்டும் என்று பூஜாபத்ததிகள் சொல்லும் விதியும் வேறுண்டோ. இதில் லயம் நேர்வது கஷ்டமென்றால், கண்ணப்பர் காளத்தியாருக்கு ஊட்டிக் கண்னெதிரே உண்பித்ததாகப் பெரியபுராணஞ் சொல்வதன் பண்பையும் பரிவையும் ஒருகால் நினைவுக்கு வருத்திக் கொண்டு ஊட்டுதல் இலகுவாயுமிருக்கும். வெகு இதமாயுமிருக்கும். வெறுமனே 'நிவேதயாமி' சொல்லுமளவில் திருப்தியுறும் நிலை நீடிக்கவிடல் ஆகாது.

சைவ ஆலயபூசை வழிபாட்டில் ஒவ்வோர் அம்சமும் உயர்வான ஆன்ம ஞானத்தின் ஒவ்வோர் அம்சப்பின்னணியில் இருத்தல் குறிக்கப்பட்டது. நைவேத்தியம் சார்பிலும் அப்படி ஒன்று கருதிக் கொள்ளப்படும். ஒவ்வோர் உயிரிலும் அதன் வாழ்முதலாக இருந்து கொண்டிருக்குஞ் சிவன் அவ்வவ்வுயிர் தன்னை அறியும் காலம் வரை அதையறியாமலே அதற்கு வினைப்போக அனுபவங்களை ஊட்டிக் கொண்டிருக்கிறார். அது செய்கையில், போகானுபவம் நிகழ்தற்கு இடமாயும் ஆசாரமாயும் இருக்கும் உடலின் போஷனைக்கு உரியவற்றையும் உரிய உபாயங்கள் மூலம் ஊட்டிக் கொண்டிருக்கிறார். மீள உயிர்தன்னை அறியவரும் சீவன் முத்தி நிலையில் அவர் முன்புதான் உயிரளவாய் ஒடுங்கியிருந்த தனது நிலையில் விரிவுற்று உடல் அளவாகவும் வியாபிக்கும் நிலை நேர்கிறது. இந்நிலையில், உயிரானது உடற்சார்பில் தான்பெறும் போக அனுபவம் எதனையும் முன்னைய பெத்த நிலையிற் போலத் தனக்கென ஏற்றுகொள்வதில்லை. அனைத்தையுஞ் சிவனே கொள்ள விட்டு விடுகிறபடியால் அந்நிலையில் அந்தச் சீவன் முத்தர்கள் உண்ணும் உணவு கூடச் சிவன் உண்பதாகவே முடியும்.

இங்கே சிவன் உண்டல் விஷயம் சிவன் நோக்கில் அல்ல; ஆன்மாவின் நோக்கிலேயாம். இப்படியான சிவன் உபகாரம், கண்டுகாட்டல் என்ற வாய்ப்பாட்டில் அடங்கும். இங்ஙனம் 'கண்டு காட்டுதல்' மூலம் உயிருக்கு, 'உண்டு ஊட்டும்' இக்கருணைக்குக் கைம்மாறு ஏது? மாணிக்கவாசக சுவாமிகள் இதனைப் பட்டவர்த்தனமாகச் சொல்லி விடுகின்றார். "எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய் யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறே" – திருவாசகம். இதில் சிவனது 'உண்டு ஊட்டல்' விதித்துச் சொல்லப்படவில்லை. அதையுஞ் சேர்த்து விரிவாக விளக்கிச் சொல்லுகிறது திருவிசைப்பாவில் ஒரு செய்யுள்.

"அண்டமோ ரணுவாம் பெருமை கொண்டு அணுவேர் அண்டமாஞ் சிறுமைகொண்டு அடியேன் – உண்ட ஊண் உனக்காம் வகைஎன துள்ளத் துள்ளெழுந்தருள் பரஞ்சோதி" – என்பது செய்யுள்.

இன்னமுந்தான் தன்வியாபகத்தின் எல்லை ஒருவராலும் அறியப்படாத பென்னம்பெரிய சிவன், அவரெதிரில் அணுமாத்திரமே ஆம் உடலிலிருந்து அந்த உயிர் உண்ட ஊனையும் தனதாக ஏற்றுக் கொள்வதென்றால் அது எப்படி முடியும்? என்ற ஆசாங்கை இருக்குந்தானே! அதுவுங் கையோடு இங்கு விலக்கப்பட்டாயிற்று எங்ஙனம்? அணுமாத்திரமான உடல் தனக்குப் பெரியதோர் அண்டம் ஆகும்படி சிவன் தன்னைச் சிறுப்பித்துக் கொள்வதால் அது முடிகின்றது என்ற விளக்கம் காண்க.

இங்ஙனம், ஆன்மவாழ்வில் இருதுருவ ங்களிலும் நமது உணவு விஷயம் இருவேறு நிலை–களில் சிவனை இன்றியமையாததாக இருக்கும். ஞானக்காட்சிப் பின்னணியில் அமைகிறது பூசையில் இடம்பெறும் நைவேத்தியம். ஆதலால், யதார்த்தமான ஊட்டற்பண்பும் பரிவும் பொங்க நைவேத்திய பூஜை நடந்தாக வேண்டும்.

இதற்கடுத்த முக்கியபூசை அம்சங்கள், தூபதீப ஆராதனை. அர்ச்சனை, வேதம் ஓதுதல், தமிழ் வேதம் ஓதல், ஆசீர்வாதம், பிரதக்ஷணம், நமஸ்காரம் என அமையும். ஒவ்வொன்றினதும் சைவஞானப் பின்னணி வருந்தியும் அறிந்து கொளளப்படுதற்கான பெறுமதி வாய்ந்த விஷயங்களாம். சைவசித்தாந்த சாஸ்திரக்கல்வி கேள்வி அறிவுகள் நூற்கல்வி யாகவோ அனுபவஸ்தர் வாய்மொழி யாகவோ சைவ ஆலயங்களில் விளக்கமுறும் நிலை ஒன்றே இதற்கு உதவுவதாம் கும்பாபிஷேகத்தில் இடம்பெறும் பொருள் விரயமல்ல, குண்டமண்டல விரிவல்ல, கிரியை விவரங்களல்ல அதில் இடம்பெறும் செயற்கிரமம், சிரத்தை, உணர்வுருக்கம், செயல்திறன் முதலியசீர் ஒழுங்குகள் நித்தியபூசை, நைமித்தியபூசை இரண்டிலும் நிலவ வேண்டும். அதில் நிலவும் பயபக்திகள் இவற்றிலும் நிலவ வேண்டும் என்பதே இக்கட்டுரையின் முக்கிய பொருள். அதன்சார்பில் இன்னுமொன்று அவசியமாகக் குறிப்பிட்டாக வேண்டும். கும்பாபிஷேகத்தில் மகாகும்பம் தாபித்துப் பூசித்து வீதிவலம் வந்து சுவாமிக்கு அபிஷேகமாகிறது. அதே பாங்கில், நைமித்திய பூசையிலும் அபிஷேகம் நடக்கும் வழக்கம் இருக்கிறது. இருந்தும் நைமித்தியத்தில் கும்பம் தயாரிக்கும் போது கும்பாபிஷேகத்தில் தயாரிக்கும் முறை பின்பற்றப்படுவதும், அன்று கும்பம் எழுந்தருளியது போலத் தலை மேற்கொண்டு கும்பம் எழுந்த ருளுவதும் இன்றைய காட்சிக்கு அரியன வாய்விட்டன. கும்பாபிஷேகக் கும்பமும் சிவகும்பம்தான்; நைமித்திய அபிஷேகக் கும்பமும் சிவகும்பம்தான். அதாவது அவற்றின் அந்தஸ்து ஒன்றேதான். அந்தக் கும்பம் பிராணப் பிரதிஷ்டை செய்து தாபிக்கப்பட்டதென்றால் இந்தக் கும்பமும் பிராணப் பிரதிஷ்டை செய்து தாபிக்கப்பட வேண்டும். அந்தக் கும்பம் சுவாமிக்குரிய கௌரவத்தோடு சிரசிலேற்றி வீதிவலம் வந்தது போல இந்தக் கும்பமும் கௌரவபூர்வமாகச் சிரசிலேறி வீதிவலம் வரவேண்டும். இந்த நடைமுறைகள் அர்த்தமற்ற சாட்டுக்களால் அவமதிக்கப்பட்டு வருகின்றன. இவைபோல்வன பிறவும் ஆலய நடைமுறையில் இல்லாமல் இல்லை. கும்பம் வைப்பதிலேயே அசாமானியமான சிரத்தையீனமும் இலகுநோக்கும் காணப்படுகிறது. கும்பம் வைக்கிறதென்றால் என்ன? குனிந்த குனியில் செய்யும் வேலைதானே. குழந்தைப்பிள்ளை வேலைதானே என்ற அபிப்பிராயம் இளைஞர் மனத்தில் புகுந்து விடத்தக்க வகையிலும் வீதிவலம் வரும்போது கைகனத்தால் சுவாமி கும்பத்தை வயிற்றில் சாத்திக் கொள்ளலாம் பரவாயில்லை என்ற அபிப்பிராயம் தோன்றக்கூடிய

வகையிலும் கருமங்கள் நடந்துகொண்டு போகின்றன. இவை போல்வன எல்லாம் ஆலயத்தில் சிவக்களை குன்றாமற் பண்ண நிகழும் பூசைநோக்கத்துக்கு முழுமாறானவை.

நாங்கள் ஆவாஹனஞ் செய்து மூர்த்தியில் இருத்துஞ் சிவத்தின் சுயஇயல்பு பற்றிக் கட்டுரை யாப்பில் நிரம்ப அறிந்துள்ளோம். எங்கே ஒரு அற்பசோர்வுதான் நேரினும் அதுவே சாட்டாக 'டிமிக்கி' கொடுத்துவிடும் இயல்பினது சிவம்; இருக்கிற இடத்திலேயே சமவேளையில் இல்லாததாகவும் இருந்துவிடும் அதீத இயல்புள்ளது சிவம் எனவுங் கண்டோம். அதனை அழைத்து ஒரு மூர்த்தியிலிருத்தி அதன் இருப்பை உறுதி செய்து கொள்ள ஆவாஹனம் வேறு, ஸ்தாபனம் வேறு, சந்நிதானம் வேறு, சந்நிரோதனம் வேறு என ஒன்றுபோல் நான்கு உபாயங்கள் கையாளப்பட வேண்டியிருந்த உபத்திரவம் பற்றியும் அறிந்தோம். இவற்றின் மூலமாக, எம் சக்திக்கியலுமளவு எல்லாவிதிமுறைகளும் குறைவறக் கையாண்டாலுங்கூட நாம் எண்ணியவாறு சிவத்தை நாம் கருதிய இடத்தில் தக்கவைத்துக் கொள்வது பரமசங்கடம் என்ற நிலை தெளிவாகிறது.

சிவன், ''பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின் – அருமைக்கும் ஒப்பின்மையான்'' (திருவருட்பயன்) என்பதறிவோம். சிவத்தின் பெருமைபோல, நுண்மைபோல, பேரருள்போலப் பெறுதற்கருமையும் தனித்துவமானது.

நிலைமை இவ்வாறாகக், குனிந்த குனியில் (சிலவேளை குழந்தைகளே) கும்பம் வைத்து முடித்து விடுவதால், அது சிவகும்பமாம் என்றும் தலையிலேற்றில் தலைநோம் என்றோ சங்கைக் குறைவென்றோ உதரத்திலேற்றி வருதல் சிவகும்ப வீதிவலமாம் என்றும் கூசாமற் கூறுவார் எவரோ?

குனிந்த குனியில் வைக்கும் தேங்காய் மாவிலை தர்ப்பைகள் அல்ல, வைப்பவர் சிவபாவனையோடு தானாந்தன்னை அற்றிருந்து புதிய தியான பாவனைகளால் கலசத்தைச் சிவமாக்கிப் பூசித்து நிரப்ப நீரைப் புண்ணியதீர்த்த நீராக அபிமந்திரித்து (ஆபோவா.......... என்றது மந்திரம்) கோயிற் சுவாமியின் பிராணனை அதன்கண் வரத்தும் பிராணப் பிரதிஷ்மையுஞ் செய்த நிலையே கும்பம் ஆவது. (பிறகு செய்யும் எந்தப் பூசையும் இதை ஈடுசெய்தாகாது) குனிந்த குனியில் இவ்வளவும் கூடுதற்கிடமெங்கே?

சாதாரண பூஜைத்திரவியங்களே தோள் மட்டத்துக்குக் கீழ்பட எடுத்துக் செல்லப்படலாகாமை கோயில் ஆசார நியமமாய் இருக்கையில், சும்மா பறுவாயில்லை என்று, சுவாமி கும்பத்தை வயிற்றோடணையக் கொண்டு செல்வது எவ்வளவு அபசாரம்?! இவ்வபசாரம் விளைவதற்கோ அரும்முயற்சியிற் பெரும் பொருள் செலவிட்டுச் ஸ்நபனபூசை செய்விக்கிறோம்? என்னேமதியீனம்!

தட்டிக் கேட்டால் எங்கும் இப்படித்தான் என்கிறார்களாம். எங்குஞ் செய்வதென்றதற்காக ஒழுங்கீனம் ஒழுங்காகுமா? அகௌரவம் கௌரம் ஆகுமா? அபசாரம் உபசாரம் ஆகுமா? அறியாமை அறிவாகுமா? பிழை சரியாகுமா? ஏன் இந்த விபரீதம்!

அறுதியிட்டுரைப்பதாயின், தானேயும் அற்பசாட்டிற் சறுக்கிவிடத் தயங்காத நோன்மைமிகும் நுண்பொருளாகிய சிவத்துவத்தை நாமாகவே உந்தித் தள்ளி ஒடவைக்கும் உதாசீனக் கிறுக்குகள் இவையென்றுதான் சொல்ல முடியும்.

*சைவாலய மேன்மை பேணும் நோக்கில்*
*இந்நிலை நீங்கியேயாக வேண்டுமா இல்லையா? சிந்தியுங்கள்.*

*தங்கள் பெறுமதிமிக்க அபிப்பிராயங்கள்.*


மு. கந்தையா
*சத்திமுற்றம்,*
*ஏழாலை மேற்கு,*
*சுன்னாகம்.*

# இருதலைக் கொள்ளி எறும்பு

- முருகவே பரமநாதன் -

எறும்பு ஒரு சிறிய பிராணி; அதனிடம் நாம் கற்றுக் கொள்ள நிறைய உண்டு. எறும்புகளின் கட்டுக்கோப்பு, அணிநிரை அமைப்பு, ஒற்றுமை, சுறு சுறுப்பு, எதிர்கால உணவுச் சேமிப்பு (மழைக்காலம்) என்பனவாய அவற்றின் உழைப்பும் சிறப்பும் மனிதனை ஈர்க்கின்றன. அவற்றுக்குச் சமம் இல்லை, அரசியல் இல்லை, ஆணவமும் இல்லை. எனவே மனிதன் எறும்பிடம் எவ்வளவோ கற்க இருக்கு. எறும்பு கூட இறைவனை வணங்கி உய்தி பெற்ற தலம் எறும்பூர். இத்தனைக்கும் சில இன எறும்புகள் கடித்தாற் கடிப்பதுமட்டுமல்ல ஒவ்வாமையால் மரணிக்கும் நிகழ்வுகளும் கண் கூடு. எறும்பிடைச் சில கெட்டித்தனம் உண்டு. புழுக்களை அரித்துக் கோதாக்கும். எறும்பூரக்கற்குழியும் அல்லவோ. எனவே எறும்பை மையமாக வைத்து மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்திலே தந்துள்ள நீத்தல் விண்ணபத்தில் இருபாடல்கள் வருகின்றன.

*எறும்பிடை நாங்கூ ழெனப்புல*
*னாலரிப் புண்டலந்த*
*வெறுந் தமியேனை விடுதிகண்*
*டாய் வெய்ய கூற்றொடுங்க*
*உறுங் கடிப் போதவை யேயுணர்*
*வுற்றவர் உம்புரும்பர்*
*பெறும்பத மேயடி யார் பெய*
*ராத பெருமையனே*

பாடல் எண் 129

இறைவன் பதப் போதுகளைக் கைப்போதுகளால் இறுகப் பற்றிக் கொண்டு அகலாதிருக்கும் அடியார் பெருமை சொல்லவும் படுமோவெனத் தமிழ்த்தாய் பேசினாள். வாசகர் கையாற் தொழுதுன் கழற் சேவடிகள் கழுமத் தழுவிக் கொண்டு என்று அடியெடுத்துப் பாடினார். சிறுகுழந்தை தாயின் முந்தானையைப் பற்றிப் பிடித்துத் தான் நினைத்ததை நிறைவேற்றுமாறு போல இறைவனைச் சிக்கெனப் பிடித்தவர் திருவாசக ஆசான். எனவே எறும்பு மண்புழுவை அரித்து, அழிப்பது போன்று புலனைந்தும் நம்மை அரிக்கும் பான்மையயை எறும்பரிக்கும் புழுவில் விளக்கி, மனச் சங்கடத்தை கொள்ளித்தலை எறும்பு கொண்டு விளக்குகிறார்.

*இருதலைக் கொள்ளியி னுள்ளெறும்*
*பொத்து நினைப்பிரிந்த*
*விரிதலை யேனை விடுதி கண்*
*டாய்வியன் மூவுலகுக்கு*
*ஒருதலை வாமன்னும் உத்தர*
*கோசமங் கைக்கரசே*
*பொருதலை மூவிலை வேல்வல*
*னேந்திப் பொலிபவனே*

பாடல் எண் 9

ஒரு மூங்கிற் குழாயின் இருபக்கமும் தீப்பற்றி எரியும் போது, குழாயின் உட்புறத்தே இருக்கும் எறும்பு நெருப்பின் காங்கை யொருபுறம், தப்பவழியின்றி அங்குமிங்கும் ஒடி வழியறியாது அலைக்கணுறும். இத்துடிப்பும் பதைப்பும் போல மாணிக்கவாசகர் தன் பிரிவாற்றாமையை நெருப்பினாற் தழுவப்பட்ட எறும்பின் நிலையினின்று பாடுகிறார். எதிர் பாராமல் நாம் உள்ளிருக்கும் போது ஓலை வீடு தீப்பற்றினால் எப்படி இருக்கும் என்பதை அனுபவத்திற் கண்டவர்

அறிவர். இவ்விதக்கருத்துத் திருவாசகத்தில் மட்டுமல்ல அருட் செல்வர் பலரின் அருளிச் செயல்களில் அமைந்துள்ளன. நாவுக்கரசு சுவாமிகள் போலத் தாண்டகம் பாடியவர் திருமங்கை யாழ்வார். இவர் பாடியது பெரிய திருமொழி. இன்னொன்று குறுந்தாண்டகம் இதிலே வரும் பாசுரம் இது.

*உள்ளமோ ஒன்றில் நில்லாது*
*ஓசையி னெரிநின் றுண்ணும்*
*கொள்ளிமே லெறும்பு போலக்*
*குழையுமா வென்ற னுள்ளம்*
*தெள்ளியீர்! தேவர்க் கெல்லாம்*
*தேவரா யுலகம் கொண்ட*
*ஒள்ளியீர் உம்மை யல்லால்*
*எழுமையும் துணையி லோமே*

திருநாலாயிரம் 2040

கொள்ளி – நெருப்புக் கொள்ளி; எறும்புபடும் மனவே தனையைப் போன்றதன் நிலைப் பாட்டை கூறிய மங்கை மன்னன் தேவதேவரே எங்கட்கு நீரேதுணை என்கிறார். இப்படியான கருதுகோள் பலரின் பாடல்களில் இடம் பெறுவதை வாசகர் தாம் புரட்டும் ஏடுகளிற் கண்டு ஒப்பீடு செய்யலாம். இவ்விதமே அருணகிரிப் பிரானின் அலங்காரத்திலும் அமைந்துளது ஒரு பாடல்.

*கொள்ளித் தலையில் எறும்பதுபோலக் குலையு மென்றன்*
*வள்ளத் துயரை யொழித்தரு ளாயொரு கோடிமுத்தந்*
*தெள்ளிக் தெழிக்குங் கடற் செந்தின் மேவிய சேவகனே*
*வள்ளிக்கு வாய்த்தவ னேமயி லேறிய மாணிக்கமே*

பாடல் எண் 106

## வில்வம்

இது சிவ மூர்த்தியின் இச்சா ஞானக் கிரியையாய்ப் பூமியில் ஆன்மாக்களின் பாவத்தைப் போக்க அவர் அருளால் கோமயத்தில் உற்பவித்தது. இதனைப் பூசிப் போர் விரத சீலராய் இம்மர மூலத்தை அடைந்து சங்கற்பம் செய்து எட்டுத்திக்குகளிலும் பசுவின் நெய்யால் தீபமிட்டு அபிடேக முறைப்படி செய்து உடை புனைந்து சாந்தணிந்து மலர் பறித்திட்டுத் தூப தீபாராதனை செய்து நிவேதித்துச் சோடோபசாரம் செய்து, வில்வ விருக்ஷேச, நிர்பீஜ, கோமயோற்பவா, சங்கரானந்த, சுத்த பதுமப் பிரிய, வியாத, புட்பாதிக, க்ஷேத்திரஞ்ஞ, வரதா பீஷ்ட, புருஷார்த்த சித்திதர, சிவப்பிரிய முதலிய திருநாமங்களைக் கொண்டு பூசிக்கச் சகல சித்தியும் பெறுவர்.

நன்றி - அபிதான சிந்தாமணி

## அட்டபுஷ்பம்

புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை

- செ. நவநீதகுமார் -

# திருவுந்தியார்

- பண்டிதர் சி. அப்புத்துரை -

"உந்திபற" என்று நிற்க வேண்டிய தொடர் ஓசை இன்பங் கருதி "உந்தீபற" என நீட்டி அருளப்பட்டது. உந்தி பறத்தல் மகளிர் விளையாட்டுகளுள் ஒன்று. "இதில் அவர்கள் சில பொருளமைத்து உந்தி பற என்று முடியும் பாட்டுக்களைப் பாடுவர்," என்பது திருக்குறள்வேள் ஜி. வரதராஜன் என்பவரது குறிப்பு. "உந்தி" என்பது பல்வரிக் கூத்துக்களுக்ளே ஒன்றென்பது அரங்கேற்றுகாதையில் அடியார்க்கு நல்லார் காட்டிய கருத்தென்றும், மகளிர் ஆடற்குரியது என்பது பிங்கலந்தையாலும்................. அறியக் கிடந்தன என்றும் பண்டிதர் க.சு நவநீதகிருஷ்ண பாரதியார் அவர்கள் கூறுவர். உந்தி பறத்தலென்பது, கறங்கு போலக் கையில் நின்று மேலொன்றை எறிந்து விளையாடும் விளையாட்டாகலாம் என்பர் கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள்.

உந்தி என்னும் ஆட்டத்தின் இயற்பெயர் அதனைக் கூறும் நூற்பகுதிக்கு ஆகுபெயராயது. அஃது மக்களுள்ளே ஒவனைத் தலைமகனாகக் கொள்ளாது இறைவனையே தலைமகனாகக் கொண்ட சிறப்புத் தோன்றத் திருக்கோவையார் என்பது போல அடையடுத்துத் திருவுந்தியார் என நின்றது, என்பது பண்டிதமணி க. சு. நவநீதகிருஷ்ண பாரதியார் குறியீடு.

இந்தப் பதிகத்துள்ள திருப்பாடல்களெல்லாம் உந்தீபற என்று நிறைவுறுவதால், அத்தொடரிலுள்ள உந்தீ என்னும் பகுதியின் இயல்பு நிலையாகிய உந்தி என்னும் சொல்லுக்கு இறுதியில் உயர்வைப் புலப்படுத்தும் "ஆர்" விகுதி சேர்த்தும், முன்னே தெய்வீக உணர்வைத் தரும் "திரு" என்னும் அடை கொடுத்தும் திருவுந்தியார் எனப்பட்டது என்பதும் ஒன்று. கலித்தாழிசை என்னும் பாவகையைச் சேர்ந்த இருபது பாடல்களைக் கொண்டது இப்பதிகம்.

இப்பதிகத்தின் திரண்ட பொருட் பொதிவென ஞானவெற்றி என்பதனைத் திருவாசத் திருவுள்ளக்கிடை குறிப்பிடும். அது திருவருள் வெற்றி என்பதாகும். மாறாகச் செல்ல விடாது தன் வழிப்படுத்துவதே திருவருள் வெற்றி என்பது.

## இப்பதிகத்தே இடம் பெற்றுள்ள வரலாறுகள்:-

1. முப்புரங்களை எரியூட்டியமை.
2. தக்கன் வேள்வி அழித்தமை.
3. உபமன்யு முனிவருக்குத் திருப்பாற் கடலீந்தமை.
4. பிரமன் சிரங் கிள்ளப்பட்டமை.
5. இராவணன் சிரங்களும் தோள்களும் இறுமாறு செய்தமை.
6. கனலியொடு திரியும் முனிவரையும் மேற்பட்டோரையுங் காத்தமை.

## முப்புரம் எரியுண்டமை பற்றியவை:

1. மேருமலையாகிய வில் வளைவுற்றது. போர் நிகழ்ந்தது. முப்புரங்களும் சிதைவுற்றன. பின்பு ஒருங்குடன் வெந்தன.
2. திருவேகம்பர் தம் கையில் இரண்டு அம்புகளை நாம் காணவில்லை. ஓரம்பையே கண்டோம். எதிர்ந்த கோட்டைகள் மூன்று. அந்த ஓரம்புகூட வேண்டாத நிலை என்றவாறு.
3. தேவர்கள் தேரினை இணைத்து விடுத்தலும், அத்தேரிற் சிவன் அடி வைத்தார். உடனும் அத்தேரின் அச்சு முறிந்தது. ஆனாலும், முப்புரம் அழிந்தன.
4. முப்புரத்திலும் பிழைக்க வல்லவர் சிவபக்தியில் ஈடுபாடுடைய மூவரைக் காத்து ஏனையோரை அழிக்கவல்லவன்.

## தக்கன் வேள்வி சிதைத்தமை பற்றிய செய்திகள்:

5. வீரபத்திரரும் பத்திரகாளியும் தத்தம் படைகளுடன் தக்கன் யாகத்தைத் தாக்கியபோது தேவர்கள் தப்பிப் பிழைக்க ஒடியமை.
6. தக்கன் வேள்வியில் அவியை ஏற்ற திருமால் வீரபத்திரரால் அடியுண்ட வேளை உயிர் மாத்திரம் போகா திருக்கப் பெற்றமை.
7. அவியை உண்ண விரும்பித் திரட்டிய அங்கியது கையை வீரபத்திரர் வெட்டியமை.
8. உமை தன் மகள் என்றும், அரனது மனைவி என்றும் பகைப்புலத்தவனாகிக் கிண்டல் செய்த தக்கனை நாம் பார்க்கக் கூடாது என்றமை.
9. தக்கன் வேள்வியில் தப்பி ஒடி, அழகிய பூங்குயில் வடிவங்கொண்டு மரத்திலேறி இந்திரன் பதுங்கினன் என்பது.
10. கொடிய கோபத்திற்குக் காரணனான தக்கன் வேள்வியின் குருவாகிய எச்சனுடைய தலை வெட்டுண்டு தொங்கியமை.
11. சிறுவிதியாகிய தக்கன் இழந்த தலைக்காக அவ்வேள்வியில் வெண்டுண்ட ஆட்டின் தலையைப் பொருத்தி உயிர்ப்பித்தமை.
12. தக்கன் வேள்வியில் அவனுக்குச் சார்பாக நின்று அவியேற்று உண்ணுதலிற் பங்கு கொள்ளப் புகுந்த பகன் என்பவனை மறைந்து ஓடாதிருக்கச் செய்வதற்காகக் கண்களைப் பறித்தமை.
13. தக்கன் வேள்வியிற் கலைமகள் மூக்கும் பிரமன் உச்சித்தலையும் அறுபட, திங்கள் முகம் தேய்த்து அழிக்கப்பட்டமை.
14. தக்கனது வேள்வியில் பிரமனும் தக்கனும் அழிய, இந்திரன் தப்பியோடும் வழியைத் தேடியமை.
15. சூரியனது கொவ்வைக் கனி போன்ற வாயிலுள்ள பற்களைத் தகர்த்து உதிர்த்தமை.
16. தன் மக்களைச் சார்ந்திருந்தும் தக்கன் தன் தலையை இழந்தமை; வேள்வி அழிந்தமை.

### உபமன்யு முனிவருக்குப் பாற்கடலீந்தமை:

17. உபமன்யு முனிவர் என்ற குழந்தையின் பொருட்டுத் திருப்பாற்கடலை வருவித்துக் கொடுத்த அழகிய சடையையுடையவனும் முருகன் தந்தையுமாகிய இறைவன்.

### பிரமன் சிரங் கிள்ளப்பட்டமை:

18. அழகிய தாமரை மலர்மேலுள்ள பிரமன் தலையை விரைவாக நகத்தாற் கிள்ளியமை.

### இராவணன் சிரங்களும் தோள்களும் இறுமாறு செய்தமை:

19. தன் புட்பக விமானத்தை நிறுத்திவிட்டு கைலையைப் பெயர்த்தவனாகிய இராவணனுடைய தலைகள் பத்தும் தோள்கள் இருபதும் இற்றமை.

### கனலியொடு திரியும் முனிவரையும் அவரினும் மேம்பட்டோரையும் காத்தமை:

20. மேலாடை அணிந்த முனிவர்கள் அழிந்து போகாமல் அவர்களை வானிற் காப்பவன் இறைவன். அதற்கப்பாலுள்ளோர்க்கும் அவனே காவலாகின்றான்.

★★★★★★★★★

# சோதிலிங்கங்கள்

| | | |
|---|---|---|
| சௌராட்டிரம் | - | சோமநாதலிங்கம் |
| ஸ்ரீசைலம் | - | மல்லிகார்ச்சுனலிங்கம் |
| உச்சயினி | - | மாகாளலிங்கம் |
| ஓங்காரம் | - | ஓங்காரலிங்கம் |
| ஹிமவத்கிரி | - | கேதாரலிங்கம் |
| டாகினி | - | பீமசங்கரலிங்கம் |
| வாரணாசி | - | விச்வேச்வரலிங்கம் |
| கோதாவரி தீரம் | - | திரியம்பகலிங்கம் |
| சிதாபுரம் | - | வைத்திய நாதலிங்கம் |
| தாருகாவனம் | - | நாகேச்வரலிங்கம் |
| சேது | - | இராமேச்வர லிங்கம் |
| சீவாலயம் | - | குச்மேசலிங்கம் |

- நீதர் -

# ஐவகைச் சிவராத்திரி

1. மகா் சிவராத்திரி

இது மாசிமாதம் தேய்பிறைச் சதுர்த்தசி அன்று வருவது. அன்று திரயோதசி முப்பது நாளிகைக்குச் சதுர்த்தசி வியாபித்திருப்பது உத்தமம். திரயோதசி பதினொன்றேகால் நாளிகைக்கு சதுர்த்தசி வியாபித்திருப்பது மத்திமம். திரயோதசி இன்றிச் சதுர்த்தசி இருப்பது அதமம். ஒருகால் அன்றைய இராத்திரிக்கு அமாவாசை பிரவேசிப்பது பரியாய சிவராத்திரி. இந்த மகாசிவராத்திரித் தினத்தில் நேரிடும் திரயோதசி பரம சிவத்திற்கு தேகமாகவும் சதுர்த்தசி தேகியாகவும், அன்றிச் சத்தியாகவும் சிவமாகவும் கூறப்பட்டிருக்கிறது.

2. யோக சிவராத்திரி

திங்கட்கிழமையன்று சூரியோதய முதல் அறுபது நாளிகை அமாவாசை இருப்பது யோக சிவராத்திரி எனப்படும்.

3. நித்திய சிவராத்திரி

ஒவ்வொரு மாதத்திலும் வரும் வளர்பிறை, தேய்பிறைச் சதுர்த்தசியில் வருவது நித்திய சிவராத்திரி.

4. பட்ச சிவராத்திரி

தைமாத தேய்பிறைப் பிரதமை தொடங்கிப் பதின்மூன்று நாள்கள் வரை நாடோறும் ஒருபொழுதுண்டு சதுர்த்தசியன்று விரதமிருப்பது பட்ச சிவராத்தரி.

5. மாத சிவராத்திரி

| | | |
|---|---|---|
| மாசி | தேய்பிறை | சதுர்த்தசி |
| பங்குனி | வளர்பிறை | திருதியை |
| சித்திரை | தேய்பிறை | அட்டமி |
| வைகாசி | வளர்பிறை | அட்டமி |
| ஆனி | வள்ர்பிறை | சதுர்த்தசி |
| ஆடி | தேய்பிறை | பஞ்சமி |
| ஆவணி | வளர்பிறை | அட்டமி |
| புரட்டாசி | வளப்பிறை | திரயோதசி |
| ஐப்பசி | வளர்பிறை | துவாதசி |
| கார்த்திகை | வளர்பிறை | சப்தமி |
| கார்த்திகை | தேய்பிறை | அட்டமி |
| மார்கழி | வளர்பிறை | சதுர்த்தசி |
| மார்கழி | தேய்பிறை | சதுர்த்சி |
| தை | வளர்பிறை | திருதியை |

# கோச்செங்கட்சோழ நாயனார்

- சிவ சண்முகவடிவேல் -

சோழ நாட்டின் பசுமைக்குச் சுருதி கூட்டுவது காவிரிநதி, முத்து அகில் சந்தனம் மணி ஆகியவற்றை அலை அள்ளிக் கரை சேர்க்கும் இடத்தில் சந்திர தீர்த்தம். சந்திரதீர்த்தின் அருகில் குளிர்ந்த சோலை. சோலையின் மருங்கில் பெருமரங்கள் செறிந்த குளிர்ந்த பூங்காவனம் ஒன்றுளது. பூஞ்சோலையில் ஒரு வெண்ணாவல். வெண்ணாவலின் கீழாகச் சிவலிங்கத் திருமேனி வெளிப்பட்டிருந்தது. சிவலிங்கத் திருவுருவத்தை வெள்ளானை நாளும் வழிபட்டு வந்தது.

ஆனை தும்பிக்கையினால் நீரை முகந்து ஆட்டியது. வாசனை மிக்க பூக்களைத் திருமேனியில் சாத்தும். அருள் நிறைந்த ஆனை காவில் வழிபட்டதால் ஆனைக்கா – திருவானைக்கா எனப் பெயராயிற்று.

ஞான அறிவு மிக்க சிலந்தி பெருமானைக் கண்டதும். பெருமானுடைய திருமுடி மேற் சருகுகள் உதிர்வதைப் பார்த்தது. தனது வாய்நூலால் விதானம் போல விரிந்து செறியப் பந்தர் இழைத்தது. வெள்ளானை மற்றைய நாள் வழிபடுவதற்கு வந்தது. சிலந்தியின் வலையைக் கண்ணுற்றது. 'பெருமானுடைய திருமுடி மீது 'இது என்ன அலங்கோலம்' என்று சிதைத்து விட்டது. யானை சென்ற பின்பு சிலந்தி வந்து பார்த்தது. மீளவும் வாய் நூலால் வலை பின்னியது. அடுத்த நாள் அடலானை வந்தது. மீண்டும் மேற்கட்டி வலையைக் குலைத்தது. சிலந்தி வந்து யானையின் செயலைக் கண்டு துணுக்குற்றது.

'எம்பெருமானுடைய திருமேனியின் மீது சருகு உதிர்கிறது. நான் வருந்தி இழைத்த நூல்வலயத்தை இந்த யானை அழிப்பதேயோ....! என்று கோபங் கொண்டது. யானையினுடைய துதிக்கையுள் புகுந்தது. 'கோபம் தீரக் கடித்தது. ஆனை வேதனை மிக்குத் தரையில் கையால் மோதியது. தன் நிலை குலைந்து பூமியில் வீழ்ந்தது. சிலந்தியும் உயிர் நீத்தது ஆனைக்கா அண்ணல் அருள் புரிந்தார் வெள்ளானைக்கு வேண்டும் வரம் ஈந்தார். சிலந்தி, சோழர் குலத்து வந்து பிறக்க அருள் செய்தார்.

மிகப் பழமையானது சோழர் குலம். சுபதேவன் சோழர் குல மன்னன். அவன் அரசி கமலாவதி. சுபதேவன் கமலவதியுடன் தில்லைப் பெருமானுடைய திருப்பாதங்களை வழிபட்டு வந்தான்.

மகப்பேறு விரும்பி மாதேவி வரம் வேண்டினாள். கூத்தப்பிரான் கருணை கூர்ந்தார். ஆனைக்காவில் சிலந்தி கமலவதி வயிற்றில் அழகிய குழந்தையாக அவதரித்தது.

கமலவதி கருப்பமுற்றதை அறிந்து மன்னன் மனம் மிக மகிழ்ந்தான். கமலவதி குழந்தை பிரசவிக்கும் நாள் நிரம்பியது. பிள்ளை பிரசவிக்கும் வேளை அணுகியது. கால நிபுணர்கள் கணித்துச் சொன்னார்கள்.

''இக்குழந்தை முப்புவனங்களையும் அரசுபுரியும். ஆனால் ஒரு நாழிகை கழித்துப் பிறக்க வேண்டும்.

'' என் கால்களை ஒரு நாழிகை கட்டித் தூக்குங்கள்.'' என்று கமலவதி கழறினார். பணியாளர்கள் அப்பணி புரிந்தார்கள். காலக் கணிதர்கள் சொல்லிய காலம் நிரம்பக் கட்டுக்களை

அவிழ்த்தார்கள். பசுங்குழவியைத் தாய் பயந்தாள். பிள்ளையைப் பார்த்தாள்: 'என் அரசன் சிவந்த கண்ணனே" என்று கூறி உயிர் பிரிந்தாள்.

சுபதேவன் தாயில்லாக் குழந்தையைத் தன்னுயிர் போல் வளர்த்தான். கோச் செங்கண்ணன் வளர்ந்து இளவரசானான். மன்னன் மணிமுடி சூட்டினான். அரசுரிமையை மைந்தனுக்கு வழங்கினான். தான் பெருந் தவத்திற் சார்ந்தான். சுபதேவன் சிவலோக நெறிநின்று சிவலோகஞ் சேர்ந்தான்.

கோச்செங்கட் சோழர் சிவபிரான் திருவருளால் தமது முற்பிறப்பை உணர்ந்தார். ஆனைக்காவில் தாம் முற்பிறப்பில் அருள் பெற்றதை உணர்ந்தார். வெண்ணாவலுடன் பொருந்த மான்கரத்தார் மகிழும் மாளிகை எடுத்தார். நன்மை பெருக அருள்நெறி நின்று திருக்கோவிற் பணி சமைத்தார்.

மந்திரிமார்களை அழைத்தார். சோழநாட்டின் நடுவே திருக்கோவில்கள் அமைக்கப் பணித்தனர். அமைச்சர்கள் சந்திரசேகரர் அமரும் ஆலயங்கள் பல கட்டி எழுப்பினார்கள். அருண்மொழித் தேவர் அதைச் சொற் கோவிலாகக் கட்டிக் காட்டும் அழகைக் காணுங்கள்:

*'மந்திரிகள் தமையேவி வள்ளல்கொடை யநபாயன்*
*முந்தைவருங் குலமுதலோ ராயமுதற் செங்கணார்*
*அந்தமில்சீர்ச் சோணாட்டி லகனாடு தொறு மணியார்*
*சந்திரசே கரனமருந் தானங்கள் பலசமைத்தார்.*

கோச்செங்கட் சோழர் தாம் அமைத்த சிவாலங்களுக்குப் பெருஞ் செல்வத்திற்கு வழிவகுத்தார். அமுது படி முதலானவற்றிற்கு விரும்பி நியமங்கள் நியமித்தார். திக்கெல்லாம் புகழ் விளங்கச் செங்கோலை முறை நடாத்தினார். முக்கண் முதல்வர் தில்லையை நினைந்தார். அம்பலத்தே ஆடும் பெருமான் அடிகளில் அன்பு பூண்டார். பேரன்பு மேலும் பெருக வணங்கினார். ஆரா அன்பு சிறந்து ஓங்கியது. உள்ளம் உருகியது. களிப்புக் கரை கடந்தது. தொழுது ஏத்தித் தொண்டு செய்து அங்குறைந்தார். அந்தணர்க்கு மாளிகை பல சமைத்தார் சிவ புண்ணியம் செழித்தது. தேவர் தொழுதார்கள்

திருத்தில்லை வேந்தர் திருவடிக்கீழ் செங்கண் வேந்தர் சிவ வாழ்வு அடைந்தார்.

## பஞ்சகௌவியம்

கோசலம், கோமயம், பால் தயிர், நெய் இவை பஞ்சகௌவியம் என்று கூறப்படும். கோசலத்திற்கு வருணனும், கோமயத்திற்கு அக்நியும், பாலிற்கு சந்திரனும், தயிருக்கு வாயுவும், நெய்க்கு விஷ்ணுவும் தேவதைகளென்று ஸ்மிருதிகள் கூறுகின்றன. செந்நிறத்த பசுவினிடம் கோசலத்தையும், வெண்ணிறப் பசுவினிடம் கோமயத்தையும், பொன்னிறத்த பசுவினிடத்துப் பாலையும், நீலநிறத்த பசுவினிடம் தயிரினையும் கருநிறத்த பசுவினிடம் நெய்யினையும் கொள்ளின் நலம். இதை மந்திர பூர்வமாகக் கலந்து உண்டவன் சகலபாவதினின்றும் நீங்கிச் சுத்தமடைகிறான்

நன்றி : அபிதான சிந்தாமணி

# சிவராத்திரிப் பெயர்க் காரணம்

இராத்திரி என்பது இருட் காலமாகும். உண்மையான இருட்காலம் இறைவன் உலகம் முழுவதையும் ஒடுக்கி நிற்கும் காலமாகும். இதனைச் ''சர்வசங்கார காலம் என்றும் பிரளயம் என்றும், ஊழி முடிவு என்றும் கூறுவர். சாதாரணமாக இரவு ஒளியின்றி, உயிர்களின் நாட்டமின்றி அமைதியாக விளங்கும். அதைப்போல சர்வசங்கார காலத்தில் பஞ்சபூதங்களும் மாயையில் ஒடுங்கிக் கிடத்தலால் எங்கும் செறிந்த இருள்தான் இருக்கும். தனு, கரண, புவன, போகங்கள் இன்றி உயிர்கள் செயலற்றுக் கிடைப்பதால் எங்கும் குறைவற்ற அமைதியே நிலவும். இந்தப் பேரிருளில் தனித்து நிற்பவன் சிவபெருமான் ஒருவரே. இந்த ஒடுக்க நிலையாகிய இரவு சிவனுக்கே உரியதாதலால் அது சிவராத்திரி எனப்பட்டது. அதனைக் குறிப்பதே மாசி மாதத்தில் கிருஷ்ண சதுர்த்தசியில் வரும் மகா சிவராத்திரியாகும்.

நன்றி - இலிங்கோத்பவர்

கங்கை முதலிய நதிகள் அனைத்தும் சிவபெருமானிடம் சென்று தம்மிடம் மக்கள் மூழ்கிப் போக்கிய பாவம் தொலைய வேண்டும் என்று வேண்டின. அது கேட்ட சிவபெருமான் நதிகள் மீது இரக்கம் கொண்டு, ''தெற்கே வேதவனம் (மறைக்காடு) என்னும் தலம் உள்ளது. அங்கே மணிகர்ணிகை என்னும் தீர்த்தம் உள்ளது. நீங்கள் அனைவரும் அங்கு சென்று மகாசிவராத்திரி அன்று நீராடி எம்மையும் வணங்குங்கள். உங்களிடம் குவிந்துள்ள பாவங்கள் அனைத்தும் விலகும். தேவர்கள் மாதந் தோறும் வருகின்ற சிவராத்திரிகளில் வேதவனம் சென்று மணி கர்ணிகையில் நீராடி மறைவன நாதரை வழிபட்டுத், தம்பதவிகளைக் காப்பாற்றிக் கொள்கின்றார்கள். ஆகையால் நீங்களும் அந்த மணிகர்ணிகையிற் சென்று நீராடுங்கள் என்று கூறினார். நதிகளெல்லாம் அவ்வாறே சிவராத்திரியில் இத்தலத்துக்கு வந்து மணிகர்ணிகையில் நீராடி இறைவனை வழிபடுவதாகக் கூறப்படுகிறது.

நன்றி - புனித கோயில்களும் புண்ணிய தீர்த்தங்களும்.

# முதலாம் சைவ வினா - விடை

## கடவுள் இயல்

1. உலகத்துக்குக் கருத்தா யாவர்?
*சிவபெருமான்.*

2. சிவபெருமான் எப்படிப்பட்டவர்?
*என்றும் உள்ளவர்; எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர்; எல்லாம் வல்லவர்.*

3. சிவபெருமான் ஆன்மாக்களுக்காகச் செய்யுந் தொழில்கள் எவை?
*படைத்தல், காத்தல், அழித்தல், என்னும் மூன்றுமாம்.*

4. சிவபெருமான் இந்த முன்று தொழில்களையும் எதைக் கொண்டு செய்வார்?
*தமது சத்தியைக் கொண்டு செய்வார்.*

5. சக்தி என்னுஞ் சொல்லுக்குப் பொருள் யாது?
*வல்லமை.*

6. சிவபெருமானுக்குச் சத்தி யாவர்?
*உமாதேவியார்.*

7. சிவபெருமானுடைய திருக்குமாரர்கள் யாவர்?
*விநாயகக் கடவுள், வைரவக் கடவுள், வீரபத்திரக் கடவுள், சுப்பிரமணியக் கடவுள் என்னும் நால்வர்.*

8. சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டு உமாதேவியாரோடும் எழுந்தருளி இருக்கும் முக்கிய ஸ்தானம் யாது?
*திருக்கைலாச மலை.*

9. சிவபெருமான் ஆன்மக்களுக்கு எவ்விடங்களிலே நின்று அருள் செய்வார்?
*சிவலிங்கம் முதலாகிய திருமேனிகளிடத்திலும், சைவாச்சாரியார் இடத்திலும், சிவனடியார் இடத்திலும் நின்று அருள் செய்வார்.*

*நன்றி : முதலாம் சைவ வினா - விடை*

---

## தரும தேவதை

வெள்ளை நிறம், நான்கு பாதம், இரண்டு கொம்புகள், உயர்ந்த முசுப்பு, பூமியிற் படியும் வாலுமுள்ள எருதின் உரு. இது முதல் யுகத்தில் நான்கு பாதத்துடனும், இரண்டாம் யுகத்தில் மூன்று பாதத்துடனும், மூன்றாம் யுகத்தில் இரண்டு பாதத்துடனும் நான்காம் யுகத்தில் ஒரு பாதத்துடனும் நடக்கும். இது திருமாலின் மார்பிற் பிறந்து சமஸ்த பிராணிகளையும் காத்து இஷ்டத்தைக் கொடுப்பது.

திருவிளையாடற் புராணம்

# உக்கிரபாண்டியன் திருவவதாரம்

- கூடலான் -

கருணாநிதியாகிய சோமசுந்தரக் கடவுள் பூமண்டலத்தில் எண்ணில்லாத காலம் செங்கோல் நடத்தி முறைசெய்தொழுகுவாராயினர். பிரம விட்டுணுக்களாலோ வேத முதலியவற்றாலோ காண்டற்கரிய பரம்பொருளான அவர் தமது அன்பர்களுக்கு எக்காலத்தும் எளிமையானவர். அதனை எல்லோரும் உணர்ந்து கொள்ளும் பொருட்டு மெய்யன்பிற் சிறந்த மலயத்துவச பாண்டியனுக்கும் அவன் மனைவி காஞ்சனமாலைக்கும் உமாதேவியாரைப் புத்திரியாக்கி, அதற்குப் பொருத்தமாகத் தாம் மருகனாகினார். அதனால் தமிழ்நாட்டு மூவேந்தர்களுள் பாண்டியர் குடிமேன்மை பெற்றது. இன்னும் அக்குடி மேன்மையடைய உலகமெல்லாவற்றையும், கருப்பமெய்தாது பெற்றருளிய மாதாவாகிய பிராட்டியாரிடத்துத் தமது நெற்றிக் கண்ணினின்றும் உதித்த முருகக் கடவுளைத் தோன்றும் வண்ணம் திருவுளஞ் செய்தார். அக் குறிப்பிற்கேற்பத் தடாதகைப் பிராட்டியார் கருப்பவதி போலானார்.

சோம வாரமும் திருவாதிரை நட்சத்திரமும் கூடிய சுபதினத்திலே குரு, கேந்திரத்திற் சிறந்திருப்ப, வேதங்கள் முழங்கக், கற்பகப்பூமாரி பொழியப், பஞ்ச துந்துபிகள் ஒலிக்க, ஓமாக்கினி வளர்க்கு முன்னே வலஞ்சுழித்தெழுந்து சோபிக்கச், சோமசுந்தரக் கடவுளும் பிராட்டியாருங் கொண்டருளிய திருக்கோலத்துக்கேற்ப அன்று உதித்த குழந்தைபோல அருட்கடலாகிய முருகக்கடவுள் பிராட்டியாரிடத்திலே திருவவதாரஞ் செய்தருளினார். பிராட்டியார் அக்குழந்தையை எடுத்து மோந்து, தழுவித் தம் நாயகரது திருக்கரத்திற் கொடுத்துப் பின் வாங்கி தம் திருமுலைகளினின்றும் சொரிந்த பாலை ஊட்டினார். சேரர், சோழர், வடதேசத்தரசர், பிரமவிட்டுணுக்கள், இந்திரன், முனிவர்கள், குறுநில மன்னர் எல்லோரும் சுந்தரபாண்டியன் திருமாளிகையை அடைந்து சுந்தரபாண்டியனையும், பிராட்டியையும் முறையாக வணங்கித் துதித்து மகிழ்ச்சி கொண்டாடினர்.

வருணன், இந்திரன், மேருப்புத்தேள் என்னும் பகைவர் மூவரும் தங்கள் வீரம் சிந்தித் தருக்கழியும் அச்சத்தைக் கொடுக்கக் கூடியவர் என்னும் பொருளில், சுந்தரபாண்டியர் அக்குழந்தைக்கு உக்கிரவருமன் என்று பெயர் சூட்டினார். பின்னர் செய்ய வேண்டிய அன்னப்பிராசனம், சௌளகர்மம், உபநயனம், என்பவற்றை அவ்வக்காலத்திலே நிறைவுசெய்து தேவ குருவாகிய பிருகஸ்பதியிடம் வேதம் முதலிய கலைகளையும் படைத் தொழில்களையும் கற்கும்படி செய்தார். எட்டு வயதிற்குள்ளேயே சகல கலைகளையும் கற்றுணர்ந்த பண்டிதரானார். உக்கிர வருமருடைய சரீரத்துள்ள இலக்கணங்களை நோக்கி இவன் பூமண்டலம் முழுமையையும் பொதுக்கடிந்து ஆளும் வல்லமை உள்ளவன்; உலகுக்கு ஒரு நாயகனாகி வாழ்வான். இவனுக்குப் பின்பு முடிசூட்டுவோம்; அதன்முன் விவாகஞ் செய்தல் வேண்டும் என்று திருவுளங் கொண்டு சுந்தரபாண்டியர் அமைச்சர்களுடன் உசாவியருளினார்.

ஆதாரம் : நாவலர் திருவிளையாடற்புராண வசனம்

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்த

# இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்.

புக்க ணைந்து புரிந்தல ரிட்டிலர்
நக்க ணைந்து நறுமலர் கொய்திலர்
சொக்க ணைந்த சுடரொளி வண்ணனை
மிக்குக் காணலுற் றாரங் கிருவரே.

அலரு நீருங்கொண் டாட்டித் தெளிதிலர்
திலக மண்டலந் தீட்டித் திரிந்திலர்
உலக மூர்த்தி யொளிநிற வண்ணனைச்
செலவு காணலுற் றாரங் கிருவரே.

ஆப்பி நீரோ டலகுகைக் கொண்டிலர்
பூப்பெய் கூடை புனைந்து சுமந்திலர்
காப்புக் கொள்ளி கபாலிதன் வேடத்தை
ஒப்பிக் காணலுற் றாரங் கிருவரே.

நெய்யும் பாலுங்கொண் டாட்டி நினைந்திலர்
பொய்யும் பொக்கமும் போக்கிப் புகழ்ந்திலர்
ஐயன் வெய்ய வழனிற வண்ணனை
மெய்யைக் காணலுற் றாரங் கிருவரே.

எருக்கங் கண்ணிகொண் டிண்டை புனைந்திலர்
பெருக்கக் கோவணம் பீறி யுடுத்திலர்
தருக்கி னாற்சென்று தாழ்சடை யண்ணலை
நெருக்கிக் காணலுற் றாரங் கிருவரே.

மரங்களேறி மலர்பறித் திட்டிலர்
நிரம்ப நீர்சுமந் தாட்டி நினைந்திலர்
உரம்பொ ருந்தி யொளிநிற வண்ணனை
நிரம்பக் காணலுற் றாரங் கிருவரே.

கட்டு வாங்கங் கபாலங்கைக் கொண்டிலர்
அட்ட மாங்கங் கிடந்தடி வீழ்ந்திலர்
சிட்டன் சேவடி சென்றெய்திக் காணிய
பட்ட கட்டமுற் றாரங் கிருவரே.

வெந்த நீறு விளங்க வணிந்திலர்
கந்த மாமல ரிண்டை புனைந்திலர்
எந்தை யேறுகந் தேறெரி வண்ணனை
அந்தங் காணலுற் றாரங் கிருவரே.

இளவெ ழுந்த விருங்குவ ளைம்மலர்
பிளவு செய்து பிணைத்தடி யிட்டிலர்
களவு செய்தொழிற் காமனைக் காய்ந்தவன்
அளவு காணலுற் றாரங் கிருவரே.

கண்டி பூண்டு கபாலங்கைக் கொண்டிலர்
விண்ட வான்சங்கம் விம்மவாய் வைத்திலர்
அண்ட மூர்த்தி யழனிற வண்ணனைக்
கெண்டிக் காணலுற் றாரங் கிருவரே.

செங்க ணானும் பிரமனுந் தம்முளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்குற் றேனென் றிலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே.

திருச்சிற்றம்பலம்

# ஒழுக்கத்துக்கு உயிரான எட்டு

நன்றி அறிதல் பொறை உடைமை இன்சொல்லோடு
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு
ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் இவைஎட்டும்
சொல்லிய ஆசார வித்து.

பிறர் செய்த உதவியை உணர்ந்து அதற்கு நன்றி பாராட்டுதல், பொறுமை உடையவராயிருத்தல், இனிய சொற்களையே பேசுதல், எந்த ஒரு உயிர்க்கும் துன்பம் தரும் எதையும் செய்யாதிருத்தல், கற்றறிதல், உலகத்தோடு ஒட்டிவாழ எண்ணுதல், அறிவுடைய பெரியோரைத் துணையாகக் கொண்டிருத்தல், நல்ல குணம் உடையவர்களோடு நட்புக் கொண்டிருப்பது என்னும் எட்டு உயர் பண்புகளே ஒழுக்கத்தின் உயிர் நாடியாகும் - ஒழுக்க நெறி என்னும் உயர்விளைச்சலுக்கு - விதையாகும்.

நன்றி : ஆசாரக் கோவை

# நினைவிற் கொள்வதற்கு

| | | | | |
|---|---|---|---|---|
| பங்குனி | 1 | 15.03.99 | திங்கள் | பிரதோஷ விரதம் ஷடசீதி புண்ணிய காலம் காலை 8.04 வரை |
| | 3 | 17.03.99 | புதன் | அமாவாசை விரதம் |
| | 6 | 20.03.99 | சனி | செல்லப்பாச்சி சுவாமி குருபூசை |
| | 7 | 21.03.99 | ஞாயிறு | சதுர்த்தி விரதம் |
| | 9 | 23.03.99 | செவ்வாய் | ஷஷ்டி விரதம், நேசர் குருபூசை |
| | 11 | 25.03.99 | வியாழன் | ஸ்ரீ ராம நவமி கணநாதர் குருபூசை |
| | 13 | 27.03.99 | சனி | ஏகாதசி விரதம், முனையடுவார் குருபூசை |
| | 14 | 28.03.99 | ஞாயிறு | யோகர் சுவாமி குருபூசை |
| | 15 | 29.03.99 | திங்கள் | பிரதோஷ விரதம் |
| | 17 | 31.03.99 | புதன் | பூரணை விரதம், பங்குனி உத்தரம் |
| | 20 | 3.04.99 | சனி | காரைக்கால் அம்மையார் குருபூசை |
| | 21 | 4.04.99 | ஞாயிறு | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| | 29 | 12.04.99 | திங்கள் | ஏகாதசி விரதம், தண்டியடிகள் குருபூசை |
| | 30 | 13.04.99 | செவ்வாய் | பிரதோஷ விரதம் ஷஷ¬ புண்ணிய காலம் பின்னிரவு 05.02 முதல் |

உ

சிவமயம்

# உங்கள் பங்களிப்பு

எங்கள் எண்ணம் நிறைவு பெற உங்கள் ஒவ்வொருவரதும் நிறைவான ஒத்துழைப்பு வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் சைவநீதியின் உறுப்பினர் ஆகவேண்டும்.

## சைவநீதி மாத இதழ்

*பெறுமதி விபரம்*

| | தனிப்பிரதி | ஆண்டொன்றிற்கு |
|---|---|---|
| இலங்கையில் | ரூபா 20.00 | ரூபா 200.00 |
| இந்தியாவில் | ரூபா 20.00 (இந்திய ரூபா) | ரூபா 200.00 (இந்திய ரூபா) |

ஏனைய நாடுகளில் ஸ்ரேலிங் பவுன் 10 அல்லது US $ 15

சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி*

**S. NAVANEETHAKUMAR,**
42, Janaki Lane,
Colombo - 04,
Sri Lanka.

...ஞ்சிபுரம் கைலாச...ாதர் கோயில் கருவறைச

சுவர்ச்சிற்...ம் - லிங்கோற்பவர்



Re... N... QD/37/ Ne... ...் சைவநீதி நிறுவனத்தினரால் 18B, புளூமெண்டோல் வீதி, கொழும்பு – 13.
என்னும் மு... ...னி ஆர்ட்ஸ் இல் அச்சிட்டு 1999–...–14 இல் வெளியிடப்பட்டது.